மாத இதழ் ரூ.10/-
Monthly Issue Rs.10/-

வருட சந்தா ரூ.100/-
Yearly Subscription Rs.100/-

# தேவனுடைய வார்த்தை

# DHEVANUDAIYA VAARTHAI

கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக (கொலோ 3:16)

மலர் / Volume 18 இதழ் / Issue 7,8 ஜூலை, ஆகஸ்ட்/ July, August 2020




" கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்"

(1 கொரி.15:51)



## சீன-இந்திய எல்லைப் பாதுகாப்பில் உயிர்நீத்த இராணுவ வீரர்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த அஞ்சலி

உங்களது மிகச்சிறப்பான வீரத்திற்கும் (Exemplary Courage), வீரதீரச் செயல்களுக்கும் (Bravery), நாங்கள் தலை வணங்குகிறோம். உங்கள் தியாகமரணத்தை (Sacrificial death) நம் தேசம் என்றும் மறக்காது. வீரமரண மடைந்த ஹவில்தார் பழனியின் மனைவி வானதிதேவி ஜூன் 1 இல் கடைசியாகத் தன்னோடு பேசும் போது "தொடர்பு கொள்ள முடியாத பகுதிக்குச் செல்லுகிறேன். ஆனாலும் நீங்கள் கவலைப்படவேண்டாம்" என்று சொன்னதைச் சொல்லிக் கதறுவது நம் நெஞ்சை உலுக்குகிறது. தங்களுக்கு அன்பானவர்களை இழந்து நிற்கும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக ஜெபியுங்கள். - தொகுப்பாசிரியர்

**"நான், நானே உங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" என்று [ஏசா.51:12]ல் கர்த்தர் சொல்லுகிறார்.** ●

## முதுமையிலும் கனிதந்த தேவமனிதர்




பேட்ரிக் ஜாசுவா அவர்களுடைய எண்ணம், மிஷனரி தரிசனம், களப்பணியில் ஈடுபாடு, ஓயாத உழைப்பு, ஆழ்ந்த ஜெப வாழ்வு இவைகளைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் அளித்த செய்திகளை காணொலியில் கேட்டிருக்கிறேன். அவர்கள் மீது எனக்கு மிகுந்த மதிப்புப் பெருகியது. அவர்கள் "தேவனுடைய வார்த்தை" இதழின் வாசகர் என்ற மகிழ்ச்சி எங்களுக்கு உண்டு. எப்படியேனும் அவர்களை நேரில் காணவேண்டும் என்ற ஆழ்ந்த விருப்பம் என்னில் துளிர்த்தது. சுமார் 3 ஆண்டுகளுக்கு முன் மதுரையில் ஜியார்ஜ் ஆலயத்தில் ஒரு நிகழ்ச்சியில் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். மிகுந்த மகிழ்ச்சியோடு என் கரங்களைப் பிடித்துக்கொண்டு பேசினார்கள். எங்கள் வேர்டு ஆஃப் கிரைஸ்ட் ஊழியங்களுக்காக ஜெபித்தார்கள். அந்நிகழ்வு என் நெஞ்சில் பசுமையாக உள்ளது. அவர்களது இழப்பு ஈடு செய்ய முடியாதது. எனினும் ஆண்டவர் அவர்களைப் போன்ற தேவமனிதர்களை எழுப்பித்தர வேண்டும். தேசத்தின் தேவை கருதி தேவன் பெரிய காரியங்களைச் செய்வார். - தொகுப்பாசிரியர் ●

## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

தவிர்க்க முடியாத நிதிநிலை நெருக்கம் காரணமாக மாதந்தோறும் வெளியிடப்படும் "தேவனுடைய வார்த்தை". ஜூலை 2020 முதல் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வெளியிடத் தீர்மானித்துள்ளோம். நிதிநிலையில் மாற்றம் ஏற்பட்ட பின் மீண்டும் மாதம் ஒருமுறை வெளியிடுவோம். இணையதளத்தில் எங்கள் மாத இதழை காண விரும்புகிறவர்கள் **www.wordofchrist.org**-ல் காணலாம். வாசகர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைப் பொறுத்துக் கொள்ளும்படியும் தொடர்ந்து வேர்டு ஆஃப் கிரைஸ்ட் இலக்கிய ஊழியங்களுக்காக ஜெபிக்கும் படியும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம். - தொகுப்பாசிரியர் ●



**மலர் - 18 ஜுலை, ஆக - 2020 இதழ் - 7,8**

**பொருளடக்கம்**


| | |
|---|---|
| 1. தலையங்கம் | 3 |
| 2. எக்காளமும் இயேசு... வருகையும் | 6 |
| 3. மருத்துவப் பணி..சகோ.சித்தனா ஜார்ஜ் | 12 |
| 4. அத்திமரத்திற்கு என்னவாயிற்று? | 18 |
| 5. நாமே தேவனுடைய ஆலயம் | 21 |
| 6. கிறிஸ்தியானின் மோட்ச.....(பாகம்-11 ) | 25 |
| 7. வஞ்சிக்கப்படாதிருங்கள் | 29 |
| 8. செய்திகள் .... | 2 |


**K. செல்வின் தங்கதுரை**
தொகுப்பாசிரியர்
செல்: 98421 43523 / 90873 06940
Website : www.wordofchrist.org

**வேர்டு ஆஃப் கிரைஸ்ட் அலுவலகம்**
**D.No.23-B, "தை கிரேஸ்"**
செபஸ்டியார் கோவில் தெரு, நியூ எல்லீஸ் நகர் விரிவாக்கம், மதுரை - 16.
**போன்:** (0452) 4345580.
E-mail : wocmdu@gmail.com

# "அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான்"

**(எண்.21:8)**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.

இஸ்ரவேல் மக்களின் விடுதலைப் பயணத்தின்போது நடந்த ஒரு சம்பவத்தை எண்.21:4-9ல் காண்கிறோம். மக்கள், தேவன் தெரிந்து கொண்டு தங்களை வழிநடத்திய மோசேக்கும், தேவனுக்கும் விரோதமாக எழும்பினார்கள். வானத்திலிருந்து தேவன் பொழிந்தருளிய மன்னாவை அற்பமாகப் பேசினார்கள். "இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள்" (வ.5). தேவன் கொடுத்த நல்ல ஈவுகளை அற்பமாக எண்ணினார்கள். அது தேவனையே அற்பமாய் எண்ணினார்கள் என்பது தான் அர்த்தம். தேவ கோபம் அவர்கள் மீது மூண்டது. மக்கள் நடுவே கொள்ளி வாய்ச் சர்ப்பங்களை அனுப்பினார். அவைகள் அவர்களைக் கடித்ததினால் அநேகர் செத்தார்கள் (வ.6). மக்கள் மத்தியில் பெரும் பீதி உண்டாயிற்று. மக்கள் மோசேயிடம் "நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய் பேசினதினால் பாவஞ்செய்தோம். சர்ப்பங்கள் எங்களை விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ண வேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான்" (வ.7).

கோபம் கொண்டு மக்களைத் தண்டித்த ஆண்டவர் மனம்மாறி தமது அன்பினாலும், இரக்கத்தினாலும் தப்பித்துக் கொள்ளும் வழியையும் மோசேக்கு சொல்லுகிறார். நீ ஒரு வெண்கல சர்ப்பத்தைச் செய்து ஒரு கம்பத்தில் உயர்த்தி தூக்கி, கடிக்கப்பட்டவர்கள் காணத்தக்கதாக வை. **“கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார்”** (வ.8).மோசே அப்படியே செய்தான். **நோக்கிப் பார்த்தவர்கள் பிழைத்தார்கள்.**

இதே காரியத்தை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நினைப்பூட்டி தம்மைக் குறித்து பேசுகிறார். சர்ப்பமானது மோசேயினால் வனாந்திரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறார் (யோவா.3:14). அதாவது இயேசுகிறிஸ்து சிலுவைக்கம்பத்தில் அறையப்பட்டு உயர்த்தி நிறுத்தப்பட வேண்டும் என்று தமது மரணத்தைக் குறிப்பிடுகிறார். “பாவத்தின் சம்பளம் மரணம்” என்று (ரோம.6:23)ல் வேதம் சொல்லுகிறது. ஆகவே நாம் நம்முடைய பாவத்தின் காரணமாக மரண தண்டனைக்கு நியமிக்கப்பட்டவர்கள். **நாம் மரண தண்டனைக்குத் தப்ப வேண்டுமானால் சிலுவையில் உயர்த்தப்பட்ட அவரை நோக்கிப் பார்க்க வேண்டும்.** ஏனெனில் அவர் நம்முடைய பாவங்களையும் நோய்களையும் தம்மேல் சுமந்துகொண்டு பாவ நிவாரண பலியாகச் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார். “அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்” என்று (1 பேது 2:24)ல் வேதம் சொல்லுகிறது. அவர் நமக்காக ஏற்றக் காயத் தழும்புகளை நோக்கிப் பார்க்கும்போது விடுதலை நிச்சயம். நாம் பிழைப்போம். சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவை நோக்கிப்பார்க்கும்போது சரீர சுகம் மாத்திரமல்ல, **“தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்பட வேண்டும்”** என்று (யோவா.3:15)ல் இயேசு தாமே கூறியுள்ளார். நம்முடைய பாவங்கள் அவருடைய தியாக மரணத்தினால் பரிகரிக்கப்பட்டது (abolished). நாம் விசுவாசத்தோடு சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்க்கும்போது நம்முடைய மரணத்திற்குப் பின்னான வாழ்வில் அவரோடு வாழும் நித்திய ஜீவனைப் பெறுகிறோம். ஆகவே உயர்த்தப்பட்ட இயேசுவை நோக்கிப் பார்க்கும்போது இரட்டிப்பான ஆசீர்வாதங்களைப் பெறுகிறோம்.

இஸ்ரவேல் மக்கள், பின்நாட்களில் கம்பத்தில் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தை சிலை வணக்கமாக மாற்றிவிட்டார்கள். “நோக்கிப் பார்த்தால் பிழைப்பான்” என்று வாக்களித்த தேவனை மறந்துவிட்டு வெண்கல சர்ப்ப சிலையைத் தூபங்காட்டி வணங்கினார்கள். சிருஷ்டிகரை மறந்து சிருஷ்டியை வணங்கினார்கள் (ரோம.1:25). எசேக்கியா இராஜாவின் காலத்தில் இந்த சர்ப்ப

விக்கிரகங்கள் எல்லாம் உடைக்கப்பட்டன. சிலைகளை உடைத்த செயல் திட்டத்திற்கு நிகுஸ்தான் (Operation Nehushtan) என்று பெயரிட்டான் (2இராஜா.18:4). தமது நோக்கத்திற்கு மாறாக மக்கள் செயல்படும்போது ஆண்டவருடைய செயல்பாடுகள் எவ்வளவு கடுமையாக இருக்கிறது. இதை நாம் எப்பொழுதும் நினைவில் கொள்ள வேண்டும்.

முழு மனுக்குலத்தின் பாவத்தைப் போக்கும் பாவநிவாரண பலியாக சிலுவையில் உயர்த்தப்பட்ட இயேசு கிறிஸ்துவை நம்முடைய அகக்கண் களால் நோக்கிப் பார்ப்போம். எந்த பாம்பால் தீண்டப்பட்டார்களோ அந்தப் பாம்பின் கடிகளினால் மரணமடையாதப்படிப் பிழைக்க, வெண்கலப் பாம்பை அடையாளப்படுத்தி உயர்த்திக் காட்டினார். அதேபோலவே எந்த பாவத்தால் மனுக்குலம் மரித்ததோ அந்த மரணத்தை மேற்கொண்டு நித்திய ஜீவனை அடைய இயேசுகிறிஸ்து தாமே பாவமாக்கப்பட்டு சிலுவையில் உயர்த்தப் பட்டார். அவரை நோக்கிப் பார்த்தால் நாம் பிழைப்போம். அவர், தேசம், இனம், நிறம், ஜாதி, மதம் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவர். ஆகவே தான் **“பூமியின் எல்லை எங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்”** என்று (ஏசா.45:22)ல் கர்த்தர் சொல்லுகிறது. நாம் பாவிகளாயிருக்கையில் நமக்காகத் தமது ஜீவனைக் கொடுத்தாரே. அறிவுக்கெட்டாத அந்த அன்பில் சார்ந்து கொள் வோம். நம்மை தம்முடைய சொந்த பிள்ளைகளாகத் தமது கரத்தின் நிழலில் மறைத்துப் பாதுகாப்பார்.

இயேசுவின் பணியில்
K. செல்வின் தங்கதுரை

## வீட்டு ஏக்க நோயுடையோர் (Homesick) பாக்கியவான்கள்

பரலோகத்தில் நமக்கு நித்தியவீடு இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக் கிறோம் (2 கொரி.5:1). பொதுவாக இவ்வுலகில் வாழும் காலத்தில் நமது வீட்டை விட்டு வெகுதொலைவில் வாழும்போது நமது சொந்தவீட்டிற்குத் திரும்பி பெற் றோரைக் காண வேண்டும் என்ற ஏக்கம் ஏற்படும்போது அந்த உணர்வை “வீட்டு ஏக்க நோய்” Homesick என்று சொல்லுகிறோம்.

இதைக்குறித்து தேவ மனிதராகிய அமோ C.கேய்பெலேயின் (Amo.C. Gaebelein) “என்னுடைய நித்திய வீட்டிற்கு இயேசு எப்போது வந்து என்னை அழைத்துச் செல்வாரோ என்று வீட்டு ஏக்க நோயால் (Homesick) தவிக்கிறேன்” என்று குறிப்பிடுகிறார். அதை மற்றுமொரு தேவமனிதர் “வீட்டு ஏக்க நோயுடையோர் பாக்கியவான்கள், அவர்கள் அந்த வீட்டிற்கு அழைத்துக் கொள்ளப்படுவார்கள்” (Blessed are the homesick they shall be called home) என்று குறிப்பிட்டுள்ளார். ●

நன்றி: “The Speaker`s Quote Book” - Ray B.zuck

# எக்காளமும் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்

**“வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப் பட்டவர்களை வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்” (மத்:24:31).**

இயேசுகிறிஸ்து, தம்முடைய வருகை எப்பொழுது எப்படி இருக்கும் என்று தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லும்பொழுது, இந்தக் காரியங்களை அவர் மகிழ்ச்சியாக அறிவிக்கிறார். தலைப்பு வசனத்தில் சொல்லியிருக்கிறபடி “எக்காளம் வலுவாய்த் தொனிக்கும்” என்ற இந்த வார்த்தைக்குக் குறிப்பான அர்த்தம் உண்டு. அவருடைய சீஷர்கள் பெரும்பாலும் இஸ்ரவேல் தேசத்தைச் சேர்ந்த யூதர்கள். அவர்களுக்கு எக்காள தொனிகளின் வேறுபாடுகள் தெரியும். எக்காளத்தைக் குறித்தும், அவைகளின் தொனிகளை குறித்தும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தேவனுடைய வருகைக்கும் எக்காளத் தொனிக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? என்று உங்களுக்கு விவரிக்க விரும்புகிறேன்.

**எக்காளம்**

“எக்காளம்” என்பது, யூத எபிரெய மொழியில் ஷோஃபார் (Shofar) என்னப்படும். இது, ஆபிரகாம், மோரியா மலையில் தன்னுடைய ஒரே மகன் ஈசாக்கைப் பலிகொடுக்கும்படிச் சென்றபொழுது, ஈசாக்கைப் பலி கொடுக்காமல், தேவன் ஆபிரகாமுக்கு ஓர் ஆட்டுக் கடாவைக் காண்பித்தார். அப்படிப்பட்ட ஆட்டுக்கடாவின் கொம்புகளிலிருந்து உருவாக்கப்படுகிற இந்தக் இசைக்கருவி தான் ஷோஃபார். இதைக் குறித்து நாம் பார்ப்போம். ஷோஃபார் என்ற இந்த இசைக்கருவி, ஆட்டுக்கடாவின் கொம்புகளிலிருந்து செய்யப் படுகிறது. இது ஓர் ஊதுகுழல் போல செயல்படும். நம் தேசத்தில் பண்டையக் காலத் தமிழ் இலக்கியங்களில் வரும் வலம்புரிச் சங்கை இதற்கு ஒப்பாக சொல்லலாம். ஆனால் இங்கே, யூதர்கள் இந்த எக்காளத்தைக் கொண்டு சத்தம் எழுப்புவார்கள். நான்கு விதமான சத்தங்கள் இதிலிருந்து எழுப்பப்படும். அந்த நான்கு விதமான சத்தங்களுக்கு நான்கு பெயர்கள் உண்டு. “டெக்கியா” (Tekiah) என்பது முதல் ஒலி. “ஷெவாரிம்” (Shevarim) என்பது இரண்டாவது ஒலி. “டெருவா” (Teru`ah) என்பது மூன்றாவது ஒலி. “டெக்கியா ஹகோடால்” (Tekiah ha-Godol) என்பது நான்காவது ஒலி. இதைச் சற்று விளக்கமாகச் சொல்லுகிறேன்.

“...மாதப்பிறப்பிலும், நியமித்த காலத்திலும், நம்முடைய பண்டிகை நாட் களிலும் எக்காளம் ஊதுங்கள்” என்று (சங்.81:3)ல் வேதம் கூறுகிறது.

மேலும், ‘‘நான் உங்களுக்காக காவலர்களை நியமித்திருக்கிறேன்’’ என்று எரே.6:17-ல் நாம் வாசிக்கிறோம். அவர்கள் தேசத்தைக் காவல் காப்பார்கள். அவர்கள் தேசத்தைக் காவல்காத்து, பகைவர்கள் தூர வரக் காணும்போதே, எக்காள ஒலியை எழுப்புவார்கள். அந்த ஒலி ஓர் எச்சரிக்கையின் ஒலியாய் எழுப்பப்படும். **“சீயோனிலே எக்காளம் ஊதுங்கள்... எச்சரிப்பின் சத்தமிடுங்கள்... கர்த்தருடைய நாள்... சமீபமாயிருக்கிறது”**என்று (யோவே.2:1)ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடுகூட, தேவனாகிய கர்த்தரே எக்காளம் ஊதி, தென் திசையின் சுழல் காற்றுகளோடு நடந்து வருகிறார் என்று வேதம் கூறுகிறது (சகரி.9:14). இப்பொழுது உன்னிப்பாக கவனியுங்கள். ‘‘டெக்கியா’’ என்றால், அது ஒரு நீளமான நெடில் மிகுந்த ஓசை. ‘‘ஷெவாரிம்’’ என்றால், அது ஒரு ஆத்துமா மனந்திரும்பி கர்த்தரிடத்திற்கு வருவதற்கு அழைப்பு விடுப்புமாற்போல, மூன்று முறை ஒலியை எழுப்புகிறது. ‘‘டெரூவா’’ என்றால், இது ஒன்பது முறை விட்டுவிட்டு ஒலி எழுப்புகிற ஸ்டெக்காடு என்கிற வகையிலான ஓர் ஓசை. நான்காவதாக, எவ்வளவு வேகமாக அந்த ஓசையை எழுப்ப முடியுமோ, அவ்வளவு வேகமாக அந்த ஓசையை எழுப்புவது.

‘‘டெக்கியா’’ என்ற முதல் ஒலி, அரசர்கள் முடிசூட்டப்படும்பொழுது அதாவது பதவி ஏற்கும்பொழுது, அந்த எக்காளத்தை ஊதுவார்கள். கடைசியில் ஊதப்படுகிற எக்காளம் என்பது, கர்த்தருடைய நாளுக்கென்று ஊதப்படுகிறது, அல்லது ஒரு பெரிய எச்சரிக்கையை அறிவிப்பதாகும். ஒரு பெரிய போருக்குத் தயாராக வேண்டிய ஒரு சூழ்நிலை. ஒரு பயங்கரம் வருகிறது என்கிறபொழுது, அதை மிகுந்த சத்தமாய், ஊதிக்கொண்டேயிருக்கிற ஒரு சத்தமாக வரும். கர்த்தருடைய வருகைக்கும் எக்காளத்திற்கும் உள்ள தொடர்பு என்ன வென்றால், வலுவாய் ஒலிக்கும் எக்காள ஓசையை தூதர்கள் எழுப்புவார்கள். அப்படியென்றால், இது கர்த்தருடைய நாள். மிகவும் பயங்கரமான நாள். தேவனாகிய கர்த்தர் வருகிறார். ஆகவே, வலுவாய் தொனிப்பது. எபிரெய மொழி வேதாகமத்தில், ‘‘ஹகோடால்’’ என்கிற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அப்படியென்றால் அது மிகுந்த நெடில் மிக்கது. மிகுந்த நேரம் ஒலிக்கக் கூடியது. அப்படிப்பட்ட எக்காள சத்தத்தை நீங்கள் கேட்பீர்கள் என்று ஆண்டவர் சொல்லுகிறார்.

இந்த நான்கு விதமான சத்தத்தையும் நீங்கள் கவனித்திருப்பீர்களானால், எக்காள சத்தத்தைக் குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள். வேதாகமத்தில், எக்காள சத்தம் பழைய ஏற்பாட்டில் மட்டுமல்ல, புதிய ஏற்பாட்டிலும் ஒலிக்கிறது. யோவான் பத்மு தீவில் தனித்துவிடப்பட்டிருக்கையில், **“கர்த்தருடைய நாளில் ஆவிக்குள்ளானேன்; அப்பொழுது எனக்குப் பின்னாலே எக்காளசத்தம் போன்ற பெரிதான ஒரு சத்தத்தைக் கேட்டேன்”** என்று (வெளி.1:10)ல் சொல்லுகிறார் . பத்மு தீவில் பக்தனாகிய யோவான், எக்காள சத்தம் போன்ற

ஒரு சத்தம் என்னோடு பேசினது. "நான் அல்பாவும், ஓமெகாவுமாக ..." என்று சொன்னார் (வெளி.1:8). அந்த சத்தத்தைக் கேட்கும்படி நான் திரும்பிப் பார்த்தேன். "மனுஷகுமாரனுக்கொப்பானவரையும் கண்டேன்" என்று சொல்லுகிறார் (வெளி.1:13). எனக்குப் பிரியமானவர்களே, யோவான், இயேசுகிறிஸ்துவை நன்கு அறிந்தவர். அவருடைய மார்பில் சாய்ந்து, அவருடைய சம்பாஷனைகளை, அவருடைய போதனைகளைக் கேட்டவர். ஆனால் இந்த வேளையில், இயேசுகிறிஸ்துவை மகிமையானவராக காண் கிறார். இன்னொரு காரியம். அவருடைய சத்தம் எக்காள சத்தத்தைப் போன்றது என்று சொல்லுகிறார். இங்கே எக்காள சத்தத்தைக் குறித்த ஒரு வித்தியாசத்தை நான் உங்களுக்கு விளக்க விரும்புகிறேன். பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் தேவனுடைய சத்தத்தைக் குறித்து எழுதப் பட்டிருக்கிறது. விசேஷமாக, முதன்முதலாக, மோசே இஸ்ரவேல் ஜனங்களை மலையின்மேல் அழைத்துச் சென்றபொழுது, அங்கே எக்காள சத்தம் ஒலித்தது (யாத்.19:19) என்று வேதத்தில் நாம் வாசிக்கிறோம். யார் அதை தொனிக்கச் செய்தார்கள். யார் அதை ஒளித்தார்கள் என்று நமக்கு குறிப்பு இல்லை. வானத்திலிருந்து தேவதூதர்கள் அதை ஒலித்தார்களா அல்லது தேவனாகிய கர்த்தர் ஒலித்தாரா என்று நமக்குத் தெரியாது. ஆனால், எக்காள சத்தம் வரவர பலமாய்த் தொனித்தது என்று வேதம் கூறுகிறது. அது அதிகமாகிக் கொண்டேயிருந்தது. அப்பொழுது மோசே கர்த்தரோடு பேசினார். கர்த்தர் மோசேக்கு மறுமொழி கொடுத்தார் என்று வேதம் கூறுகிறது. எக்காள சத்தம் இஸ்ரவேல் ஜனங்களைக் கதிகலங்கப் பண்ணிற்று. முதன்முறையாக இஸ்ரவேல் ஜனங்கள் எக்காள சத்தத்தைக் கேட்டார்கள்.

தேவனாகிய கர்த்தர் மோசேயோடு பேசும்பொழுது, மேகத்தில் தேவன் வந்து இறங்கினார். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தைகள் இடிமுழக் கத்திற்கு ஒப்பானதாக இருந்தது என்று யாத்.19:16-ஐ மேற்கோள் காட்டி வேதாகம வல்லுநர்கள் கருதுகிறார்கள். எக்காளம் ஒலித்தது. அப்படியென்றால், பழைய ஏற்பாட்டுக் காலங்களில் கர்த்தருடைய வார்த்தைகள் இடிமுழக் கத்திற்கு ஒப்பான வார்த்தைகளாய் காணப்பட்டது. இடைக்காலத்தில் எந்தவொரு தேவனுடைய வார்த்தையும் இல்லாதபோது, இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். அவர் வந்த பிறகு, திரும்பவும் தேவனுடைய மேகம் அவருக்கு மேலாக காணப்பட்டது. அவர் மறுரூபமடைந்தார். அவருடைய முகம் சூரியனைப் போல பிரகாசித்தது (மத்.17:2). மூன்று முக்கியமான அப்போஸ்தலர்கள் அவரோடுகூட இருந்தார்கள். அவர்கள் அந்த சத்தத்தைக் கேட்டு, மிகவும் பயந்தார்கள். மேகம் இயேசுகிறிஸ்துவை மூடினது. மேகத்திலிருந்து ஒரு சத்தம் ஒலித்தது. அது இடிமுழக்கத்தின் சத்தமாக இருந்திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். ஆனால், அது

மிகுந்த பலம் வாய்ந்த சத்தமாக இருந்தது என்று வேதம் கூறுகிறது. அதன்பின்பு, இயேசு கிறிஸ்துவானவர் வெளிப்படுத்தின விசேஷத்தில், எக்காள சத்தம் போன்ற சத்தத்தில் பேசினார். ஆகவே, மேகத்திலிருந்து ஒலித்த பிதாவாகிய தேவனின் சத்தம் இடிமுழக்கத்தைப் போல இருந்ததென்றால், அந்த நாட்களிலிருந்தே இயேசு கிறிஸ்துவின் சத்தமே எக்காளம் போன்ற சத்தமாக இருந்திருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். தேவ குமாரனுடைய சத்தம் ஜனங்களை அழைக்க உதவியது. அவர் வருகையை அறிவிக்கும் சத்தமாகும். திரியேக தேவர்களில் ஒருவராகிய இயேசு கிறிஸ்துவின் சத்தம் அந்த நாட்களிலிருந்து ஒலித்துக்கொண்டே இருக்கிறது. இந்த நாட்களிலும் நமக்கு அவருடைய வருகையின் சத்தமாய் அந்த சத்தம் ஒலிக்கிறது. ஆகவே, ஆண்டவராகிய கர்த்தர் எக்காளம் ஊதுகிறார். அவருடைய சத்தம் எக்காளத்தைப்போல ஒலிக்கிறது (சக.9:14). யோவான் தீர்க்கதரிசி, பத்மு தீவில் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, ‘‘மனுஷகுமாரனுக்கொப்பானவரை கண்டேன்’’ என்று சொல்லுகிறார். அதேபோல தானியேல், ‘‘நான் மனுஷகுமாரனுக்கொப்பான சாயலானவரைக் கண்டேன்’’ என்று சொல்லுகிறார் (தானி.7:13). அவரைத் தேவனாகிய கர்த்தர் சிங்காசனத்திற்குக் கொண்டு வந்தார். கர்த்தத்துவம் அவருக்கு தரப்பட்டது. நித்திய காலமாய் அவர் ஆளுகை செய்வார். இந்தக் காரியம் அப்பொழுது அவனுக்குப் புரியவில்லை. ஆனால், இன்று வாழ்கிற நமக்கு அது நன்கு புரியும். தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து, மனுஷகுமாரனுக்கொப் பானவராக காணப்பட்டார். அவருடைய வருகைக்கு எக்காளம் அடை யாளமாக தரப்பட்டிருக்கிறது. ஆகவேதான் வலுவாய் எக்காள சத்தம் தொனிக்கும்பொழுது, தேவ தூதர்கள் நான்கு திசைகளிலுமிருந்து அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச் சேர்ப்பார்கள் என்று சொல்லுகிறார்.

## இரண்டாம் வருகை என்றால் என்ன?

இயேசுகிறிஸ்து முதல் முறை வந்தார். இரண்டாம் முறை திரும்பவும் வந்து, தம்முடைய ஜனங்களை கூட்டிச் சேர்த்து, அவர்களைத் தம்மோடுகூட அழைத்துச் செல்வார். வேதத்தில், ‘‘இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்’’ (1 கொரி.15:51) என்றும் ‘‘கர்த்தர் தாமே...தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்...பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடே ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்’’ என்றும் (1 தெச.4:17)ல்

வேதம் கூறுகிறது. இயேசுகிறிஸ்து இரண்டாவது முறை வரும்பொழுது, அவர் தம்முடைய ஜனங்களைச் சேர்க்க வருகிறார்.

“இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி... பலன் என்னோடேகூட வருகிறது” என்று (வெளி.22:12)ல் இயேசு சொன்னார். நாம் அநேக கிரியைகளைச் செய்கிறோம். தேவன் நம்மைக் காண்கிறாரா? இதையெல்லாம் நினைத்திருக்கிறாரா? பின்பு ஏன் எனக்கு இவ்வளவு பெரிய துன்பம்? என்று நாம் கவலைப்படுகிறோம். “உன் கிரியைகளுக்குப் பலன் இல்லாமல் போவதில்லை” என்று ஆண்டவர் சொல்லுகிறார். ஆம், நீங்கள் செய்கிற ஒவ்வொரு கிரியைகளுக்கும் பலன் உண்டு. உங்கள் விசுவாசத்தின் கிரியைகளுக்கும் பலன் உண்டு. உங்களுடைய விசுவாசத்தின் கிரியைகளுக்கு பெரிய பலன்களை ஆண்டவரிடத்திலிருந்து எதிர்பாருங்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மலை உபதேசத்தில் சொல்லும்பொழுது, “நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்” என்று சொன்னார். அங்கு அவர் சொன்ன வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவருடைய வருகையிலே அவர் செய்யப்போகும் நீதியான நியாயத்தீர்ப்பை, அவர் வழங்கப்போகும் நீதியான பலன்களைக் குறிக்கிறது. ஆகவே, நாம் கவலைப்படாதிருப்போம், துன்பங்களை மறந்திருப்போம். கடைசி எக்காளம் தொனிக்கும்போது, இயேசு நிச்சயம் வருவார். நம் எல்லோரையும் தம்மோடு எடுத்துக்கொண்டு செல்வார்.

**அவருடைய இந்த வருகைக்கு நாம் எப்படி பங்காளிகளாக மாற முடியும்?**

“வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்” என்று தாவீது மன்றாடுகிறான் (சங்.139:24). “வேதனை உண்டாக்கும் வழிகள்” என்றால் வேதனைப் படுத்தும் மாறுபாடான வழிகள் என்று எபிரேய மொழி வேதாகமம் சொல்லுகிறது. நாம் மனந்திரும்ப வேண்டும், இரட்சிக்கப்பட வேண்டும், ஞானஸ்நானம் பெற வேண்டும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற வேண்டும். இப்படி எல்லா காரியங்களையும் செய்தால் அவருடைய வருகையில் பங்கடைந்துவிடலாம் என்று பொதுவாக நாம் எண்ணுகிறோம். எனக்குப் பிரியமானவர்களே, இவைகள் எல்லாம் அவசியம்தான்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில், ஏழு சபைகளுக்கு எழுதப்பட்டக் கடிதங்களை வாசிக்கிறோம். அவைகள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற சபைகள்தான். ஆனாலும் உன்னிடத்தில் இன்னென்ன குறையுண்டு, என்று குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். குறை களைக் களையாதிருந்தால் வரும் தண்டனையை எச்சரிப்பபோடு நம்மை நாமே நிதானித்து அறிந்து, தகாதவைகளை நீக்கி

ஜெயங்கொள்ளுவோமானால் நமக்கு நியமித்து வைத்திருக்கும் நற்பிரதி பலன்களைக் பெறுகிறோம். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம் என்று (1 கொரி.11:31)ல் வேதம் சொல்லுகிறது. ‘‘கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்’’ (எபே.2:8) என்று வேதம் சொல்லுகிறது. இந்த கிருபையினால் தான் நமது கடைசி இரட்சிப்பையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இதைத்தான் ‘‘கடைசிக் காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பு’’ (Final Salvation) என்று வேதம் சொல்லுகிறது (1 பேது.1:5). இது கிருபையினால்தான் சாத்தியமாகும் என்று அறிகிறோம். ஆகவேதான் **‘‘இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள்’’** என்று வேதம் வலியுறுத்துகிறது (வ.13). ஆண்டவருடைய வருகைக்கு நம்மை தகுதிப்படுத்தும்படி தேவனுடைய சமுகத்திலே நம்மை அர்ப்பணிப்போம். கிருபையை சார்ந்து கொள்வோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

– **நன்றி:** டாக்டர்.பால் N. www.gloryofjesus.org, Chennai. Mo:98847 39635 ●

**31ம் பக்கத் தொடர்ச்சி...**

வெற்றியைச் சுதந்தரித்துக் கொண்டான். தேவனுடைய வார்த்தையில் சார்ந்து கொள்ளத் தீர்மானிப்போம். முன்னேறிச் செல்லுவோம். ‘‘நீ காலாட்களோடே ஓடும் போதே உன்னை இளைக்கப்பண்ணினார் களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்?’’ என்று (எரே.12:5)ல் வேதம் கேட்கிறது. காலால் நடக்கிறவர்களோடு உங்களால் சேர்ந்து நடக்க முடியவில்லை யானால் குதிரைகளோடு சேர்ந்து உங்களால் ஓடமுடியாது. சிறிய ஒரு நீரோடையின் தண்ணீருக்கே, நீங்கள் கலங்கிப் பயந்தால் யோர்தான் பெருக்கெடுத்து வரும்போது அதை உங்களால் சமாளிக்க முடியாது. ஆனால் முடிவு, குதிரைகளோடு ஓடுவது, பெருக்கெடுத்து வரும் யோர்தானைக் கடப்பது போன்ற சம்பவங்களால் உங்கள் இருதயம் கலங்காதபடி எச்சரிக்கையாய் இருங்கள் என்று சொன்ன இயேசு, உங்கள் கரத்தைப் பிடித்து நடத்தவும் செய்வார். உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று சொன்ன இயேசு பிதாவின் மீதும், உங்களுக்குள்ள விசுவாசத்தைப் பெருகச் செய்வார்.

வழுவாதபடி உங்களைப் பாதுகாப்பார். தமது மகிமையுள்ள சந்நிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடே கொண்டு போய்ச் சேர்ப்பார். உங்களை மாசற்றவர்களாய் நிறுத்துவார். இதைச் செய்ய வல்லமையும், ஞானமும் உள்ளவராக இயேசுகிறிஸ்து காணப்படுகிறார். அவருக்கே எல்லா மகிமையும் உண்டாவதாக. ●



## கோவிட் 19 நோயாளிகளின் மருத்துவப் பணி மத்தியில் ஓர் ஆவிக்குரிய யுத்தம்


### சகோதரி. சித்தனா ஜார்ஜ்

நர்ஸ் மேலாளர் (Nursing Superintendent)

நாசா யுனிவர்சிட்டி மருத்துவமனை நியுயார்க், அமெரிக்கா
(Nassau University Medical Hospital)


சகோதரி. சித்தனா ஜார்ஜ் அவர்கள் கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் மருத்துவப் பணியாளராகப் பணி யாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நியூயார்க் நகரிலுள்ள ஒரு தமிழ்ச் சபையைச் சேர்ந்த, அவர்கள் உடைய சாட்சி நெஞ்சைப் பதை பதைக்கும் சாட்சியாக இருக்கிறது. கேட்கிற நம்மையும் அது உலுக்கி விடுகிறது. அந்தச் சாட்சி மருத்துவப் பணியாளர்கள் மாத்திரமல்ல நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய அநேக காரியங் களை உள்ளடக்கியதாக உள்ளது.

கொரோனா வைரஸ் அமெரிக் காவில் என்றுமில்லாத அளவு பெரும்பாதிப்பையும், உயிரிழப் பையும் தொடர்ந்து உண்டாக்கிக் கொண்டேயிருக்கிறது. முழு தேசமும் ஒரு பேரச்சத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. எந்த நாளிலிருந்து கொரோனா நோயாளிகள் எங்கள் மருத்துவ மனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப் பட்டார்களோ அன்றிலிருந்தே அவர்களுக்கு எந்த அளவு மரண பயமிருந்ததோ அதே பயமும் பதட்டமும் (Fear and Anxiety) பணி யாற்றுகிற எங்களையும் ஆட் கொண்டுவிட்டது. எந்த நிமிடம் அந்த நோய் நம்மைத் தொற்றி விடுமோ என்ற பயத்தில் நோயாளியிருக்கும் அறைக்குள் மூச்சைப் பிடித்துக் கொண்டு உள்ளே சென்று மருந்தைக் கொடுத்துவிட்டு அல்லது காய்ச்சல் உள்ளதா இல்லையா என்பதை பார்த்து விட்டு உடனே வெளியே ஓடிவந்து விடுவது போல்தான் இருந் தோம். எந்த நேரத்திலும் எந்த நோயாளியையும் என்னைப் பார்க்கச் சொல்லி விடுவார்களோ என்று பயந்து நான் ஒளிந்து கொள்வேன். எப்போ வேலை நேரம் முடியுமோ என்று ஆவலோடு காத்திருந்து வீட்டிற்குச் சென்றாலும் கணவனையோ, பிள்ளைகளையோ என்நிமித்தமாக தொற்றிவிடக்கூடாதே என்று அவர் களை விட்டு விலகியே இருப்பது மிகக் கொடுமையாக இருந்தது.

மருத்துவமனையில் கோர்ட் புளு (Court Blue) என்ற அறிவிப்புச் சத்தம் வந்தாலே ஒரு நோயாளி மரிக்கப் போகிறார் என்பதை அறிந்து கொள் வோம். அப்போதெல்லாம் பயத்தால் என் இருதயத் துடிப்பு பயங்கரமாகக் கூடிவிடும். சில சமயங்களில் எனக்கு

நெஞ்சுவலியே வந்துவிடும். எனினும் உடனே மிகத்துரிதமாக அவரைக் காப்பாற்ற என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ அவைகள் செய்யப்படும் (செயற்கை முறை சுவாசம் பொறுத்துதல், குழாய்கள் மூலம் மருந்து, உணவு செலுத்துதல்) அப்படிப்பட்ட நிலையை எட்டிய எந்தக் கொரோனா நோயாளியும் பிழைப்பது மிக அரிது. அப்படிப்பட்ட பிரேதத்தை நாங்கள்தான் பிளாஸ்டிக் பேக்கில் வைத்துக் கட்டித் தள்ளுவண்டியில் ஏற்றி பிரேதவைப்பு அறைக்குக் (Mortuary) கொண்டு செல்ல வேண்டும். அங்கு அப்புறப்படுத்தப்படாத அநேக பிரேதங்கள் இருக்கும். இடம் இல்லாமையால் வெளியே எத்தனையோ பிரேதங்கள் வைக்கப்பட்டிருக்கும். கொரோனா வைரஸ் நோயாளிகள் வருவதற்கு முன்பாக ‘‘கோர்ட் புளூ’’ என்ற சத்தம் எப்போதாவது ஒரு முறை கேட்போம். ஆனால் இப்போது அநேகமாக 10 நிமிடங்களுக்கு ஒரு முறை அந்த சத்தம் வரும். ஒரு நாளைக்கு 20 முதல் 30 நோயாளிகள் மரிக்கிறார்கள். எப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாங்கள் மருத்துவப் பணியாற்றுகிறோம் என்பதை நீங்கள் கற்பனை செய்து பாருங்கள். மரணத்திற்கு மேல் மரணம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். இதற்கெல்லாம் முடிவே இல்லையா என்று என் இருதயத்தில் குமுறிக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் எங்களோடு பணியாற்றுகிற கேரளத்தைச் சேர்ந்த நர்சினுடைய 21வயதான தம்பியை அவர்களது அப்பா அழைத்து வந்திருந்தார். அவனுக்கு மூச்சுவிட சற்று சிரமம் இருப்பதாக மருத்துவமனைக்கு வந்தான். நோயாளி தவிர வேறு யாரும் கூட வரக்கூடாதாகையால் அவனது அப்பா காரிலே அமர்ந்திருந்தார். அவனைப் பரிசோதனை செய்த மருத்துவர் உடனே தீவிர சிகிச்சையளிக்க வேண்டுமென்று சொன்னபடியால் அவன் தனது அப்பாவுக்கு போன் செய்து அவரை வீட்டுக்குப் போகச் சொல்லிவிட்டு தான் சற்று பிந்தி வருவதாகச் சொன்னான். ‘‘இல்லை, நான் காத்திருந்து உன்னை அழைத்துச் செல்லுகிறேன்’’ என்று காரில் இருந்தார். அடுத்த இரண்டாவது நிமிடம் டாக்டர், ‘‘உங்கள் மகன் இறந்துவிட்டான்’’ என்று தகவல் சொன்னார். இவற்றையெல்லாம் கண்ணால் பார்த்த எங்களுக்கு பெரிய அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது. அந்த பெற்றோர்கள் எப்படித் துடிதுடித்துப் போயிருப்பார்கள். இவைகளெல்லாம் என்னை வெகு வாய்ப் பாதித்தன.

இந்தக் கால சூழ்நிலையில் எங்கள் நெருங்கிய உறவினரான சகோத ரரும் (Cousin Brother) அவருடைய மனைவியும் எங்களோடு தொலை பேசியில் பேசினார்கள். அவர்கள் நல்ல தேவபக்தியுள்ள குடும்பம். அந்த சகோதரி என்னோடு பேசினார்கள். ‘‘நீ தேவ

சித்தம் செய்வதற்கு பயந்து ஒளிந்து கொண்டிருக்கிறாய். நீ உன் பயத்திலிருந்து விடுதலையாகவேண்டும்'' என்று ஆண்டவர் உன்னிடத்தில் எதிர்பார்க்கிறார். இதைச் சொன்னதினால் என்னுடைய நிலவரத்தை அப்படியே சொல்லுகிறார்களே என்று ஆச்சரியப்பட்டேன். ''அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்'' என்று (1 யோவா.4:18)ல் வேதம் சொல்லுகிறது. தேவன் மீதும் உன்னிடம் ஒப்புவிக்கப்படும் நோயாளிகளின் மீதும் அன்பு செலுத்த ஆரம்பித்தால் உனக்கு பயம் வராது. இயேசு நோயாளிகளைப் பார்த்து ''மனதுருகினார்'' என்று காண்கிறோமே. **இயேசுவின் அந்த மனதுருக்கம் நமக்கு வேண்டாமா? என்று பேசிக் கொண்டிருக்கும் போதே ஆண்டவர் என் பயத்தை என் இருதயத்தை விட்டு எடுத்துக் போட்டதை நான் உணர்ந்தேன்**. கர்த்தர் ''என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கி விட்டார்'' என்று (சங்.34:4)ல் தாவீது சொன்னதுபோல் என்னையும் என் எல்லா பயத்திற்கும் அப்போதே என் இருதயத்திலிருந்து நீக்கிப் போட்டார். என்னில் மனதுருக்கமான இருதயத்தை உணர்ந்தேன். என்னைத் தைரியப்படுத்தும் வகையில் அநேக வசனங்களைக் கொண்டு எனக்காக ஜெபித்தார்கள். **பயம் நீங்கி என் இருதயம் சமாதானத்தினால் நிரம்பியதை உணர்ந்தேன்**.

அது ஒரு திங்கட்கிழமை. நான் எந்த பயமுமின்றி மருத்துவமனைக்குள் நுழைந்தேன். என்னோடு பணியாற்றுகிறவர்கள் என் முகத்தில் வித்தியாசத்தைக் கண்டார்கள். என்னை விசாரித்தார்கள். என்னிலிருந்த பயம் நீங்கியதைக் குறித்த காரியங்களை அவர்களோடு பகிர்ந்து கொண்டேன். அவர்களைத் தைரியப்படுத்தி உற்சாகப்படுத்தினேன். நோயாளிகளுடன் கூடுதல் நேரம் செலவழித்தேன். அவர்களோடு பேசி ஜெபம் பண்ணினேன். அவர்கள் ஆறுதலடைந்தனர். மரணம் சம்பவிக்காமலில்லை. **ஆனாலும் மரித்தோரின் எண்ணிக்கை குறைந்தது**.

நான் வீட்டிற்குச் சென்றாலும் அதிகநேரம் தேவ சமுகத்தில் அமர்ந்திருந்து வேதத்தை வாசித்து தியானம் செய்ய ஆரம்பித்தேன். ''பயப்படாதே, உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர் சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்'' என்று ஏசா.43:1இலும், ''நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்'' என்று ஏசா.41:10இலும் இன்னும் இது போன்ற அநேக வார்த்தைகள் என்னைப் பெலப்படுத்தின.

நாம் ஒவ்வொருவரும் தனிமைப் படுத்தப்படுகிறோமே. இதற்கு ஒரு

முடிவு வராதா என்று நான் நினைத்துப் பார்த்தேன். ஆண்டவர் அறியாமல் ஒன்றும் நடப்பதில்லை என்று நிச்சயித்துக் கொண்டேன். ஆனாலும் ஆண்டவர் எனக்குச் சில காரியங்களைத் தமது வசனத்தின் மூலமாக நினைப்பூட்டினார். இயேசு கிறிஸ்து தம்முடைய உபதேசத்தைக் கேட்க வந்த மக்களையும் அனுப்பி விட்டுத் தம்முடைய சீடர்களையும் பெத்சாயிதாவுக்கு தமக்கு முன் பாகவே படவில் ஏறிச் செல்ல துரிதப் படுத்தி அனுப்பிவிட்டு தான் தனித் திருப்பதற்கு மலைக்கு ஏறினார் என்று காண்கிறோம். ஏன்? தனித் திருந்து ஜெபம் பண்ண விரும்பி மலைக்கு ஏறினார் (மாற்.6:45,46). இயேசுகிறிஸ்து தமது பிதாவை நோக்கி ஜெபிப்பதற்கு இவ்வளவு கரிசனையுள்ளவராக இருப்பா ரானால் நாம் ஜெபிப்பதற்கு எவ்வளவு கரிசனையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். நீண்ட நேரம் தனித்திருப் பதற்கு ஆண்டவர் நமக்கு தருணங் களைத் தந்திருக்கிறாரே. அதை ஆண்டவர் விரும்பும் வகையில் அந்த நேரத்தை செலவிடுகிறோமா? மேலும் கவனியுங்கள். சீடர்கள் சென்ற படகுக்கு, காற்று எதிரா யிருந்தபடியினால் தண்டு வலிக் கிறதில் மிகவும் சிரமப்பட்டனர் என் பதைக் கடலின் கரைக்கு வந்து தனிமையாக இருந்தபோது இயேசு கண்டார். கடலில் வெகு தூரத்தில் நடந்த சம்பவத்தை அவர் எப்படிக் கண்டார்? “தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமை விளங்கப் பண்ணும்படி, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது” (2 நாளா.16:9). நாம் எங்கிருந்தாலும் அவருடைய பார்வையில் உத்தம இருதயத்தோடி ருப்போமானால் நம்மீது கரிசனை யுள்ளவராயிருந்து நம்மைக் காக் கிறார், அவர் விரும்புகிற செம்மை யான பாதையில் நம்மை நடத்து கிறார். இத்தனை கரிசனையுள்ள ஆண்டவர் தமது சீடர்களுக்கு ஏன் அந்த கடினமான சம்பவத்தை அனு மதிக்க வேண்டும்? எதிர்காற்று இல்லாமற் செய்திருக்கலாமே என்று எண்ணத் தோன்றலாம். சிலவேளை களில் நாம் விசுவாசத்தில் வலுப் பட கடினமான பாதைகளை அனு மதிக்கிறார். எனினும் நம்முடைய விசுவாசம் ஒழிந்துபோகாமல் நம்மைக் காத்துக் கொள்ளுகிறார்.

யாக்கோபு தன் சொந்த தேசத் திற்குத் திரும்பி வரும்போது யாப் போக்கு என்ற நதியண்டை வந்த யுடன் தனது மனைவி பிள்ளை களையும், ஆடுமாடுகளையும் அக்கரைப்படுத்தி விட்டுத் தனித் திருந்து ஜெபம் பண்ணினான் என்றும் அவன் ஜெபத்தில் போராடி ஆசீர்வாதங்களைக் பெற்றுக் கொண்டான் என்றும் காண்கிறோம் (ஆதி.32:22-30). ஆகவே ஜெபம் ஓர் ஆவிக்குரிய போராட்டம். அதில் யாக்கோபு வெற்றி பெற்றான்.

அன்னாள் தனிமையில் தேவா லயத்திற்குள் சென்று தன்னுடைய

இருதயத்தை ஊற்றி பொருத்தனை செய்து ஜெபித்ததைக் கண்டு கர்த்தர் அவளுக்கு சாமுவேலைக் கொடுத்த சம்பவத்தைக் காண்கிறோம் (1 சாமு.1:10,11). தன்னை தனிமைப் படுத்தி ஜெபிக்கும்போது ஜெபிக்கும் தன்மை மாறுகிறது. "கர்த்தர் அவளை நினைத்தருளினார்" (வ.19). இன்னும் மோசே,எலியா போன்றோர் தனித்திருந்து ஜெபித்து சாதனைகளை படைத்திருப்பதைக் காண்கிறோம்.

ஆண்டவர் ஏன் இவைகளையெல்லாம் அனுமதித்திருக்கிறார் என்று ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் ஒரு நோக்கத்தோடும் திட்டத்தோடும் உருவாக்கியிருக்கிறார். நாம் நம்முடைய சுயவிருப்பத்தின்படி அவரை விட்டு வழி விலகி வெகுதூரம் சென்று விடுகிறோம். தனிமனிதன் சீர்கெட்டால் சமுதாயமும், தேசமும் சீர்கெட்டுப் போகும். வேதத்திற்குப் புறம்பான எத்தனையோ சட்டங்கள் இன்று நாட்டில் இருக்கின்றன. நாம் அவரை விட்டு எங்கோ போய்விட்டோம். நாம் உணர்வடைந்து அவரிடம் திரும்ப வேண்டிய காலம் இது.

நான் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவள் தான். நான் சிறுபிள்ளையாக இருந்த நாட்களில் அதிகாலை எழுந்து ஒரு வசனத்தை மனப்பாடம் செய்து ஒப்புவிக்காவிட்டால் அம்மா காலை உணவு தரமாட்டார்கள். அது நல்லது தான். ஆனால் வசனத்தைக் கொண்டு ஆண்டவரோடு எந்த அளவு நெருங்கிய ஐக்கியத்தை உண்டாக்கியிருக்கிறோம். அந்த உறவுதான் நம்மில் விசுவாசத்தை உருவாக்கி நம்மை அவரண்டை நடத்தும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோவின் விசுவாசத்தைப் பாருங்கள். "நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர்... விடுவிப்பார். விடுவிக்காமற் போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை" என்றனர் (தானி.3: 17,18). அவர்களுடைய விசுவாசத்தின் வைராக்கியம் எவ்வளவு பெரியது.

வேத வல்லுநர்கள் இது ஒரு எழுப்புதலின் காலத்தின் முன்னோடி என்கின்றனர். இயேசுகிறிஸ்துவின் வருகையின் கால அடையாளங்களைச் சொல்லும்போது கொள்ளை நோய்களும், பஞ்சங்களும், பூமி அதிர்ச்சிகளும் உண்டாகும் என்றும் "இவைகளெல்லாம் வேதனைகளுக்கு ஆரம்பம்" என்றும் வேதம் சொல்லுகிறது (மத்.24:8). இந்த தேசம் இயேசு கிறிஸ்துவின் பக்கமாகத் திரும்ப வேண்டுமானால் அவரை நம் இருதயத்தில் ஏற்றுக் கொண்டிருக்கும் நாம் ஜெபிக்க வேண்டும். நம்மைக் காண்கிற மற்றவர்கள் நம்மிலுள்ள வித்தியாசத்தைக் காண வேண்டும். முதலில் நம்முடைய பிள்ளைகள் அந்த வித்தியாசத்தைக்

காண வேண்டும். பெற்றோர்களாகிய நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இல்லாவிட்டால் நாம் நம்முடைய பிள்ளைகளை இழந்து விடுவோம். நம்முடைய வாழ்வு முறையைக் காண்கிற அநேகர் நம் மூலமாக ஆண்டவர் பக்கம் திரும்பு வார்கள். சகரியா 8:14-23 வசனங் கள் சொல்லுகின்றன. "அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதி யாரில் பத்து மனுஷர் ஒரு யூத னுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்க ளோடே இருக்கிறார் என்று கேள்விப் பட்டோம்; ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார் என்றார்". (சகரியா 8:23)ல் சொல்லப்பட்டிருக்கிறபடி அநேகர் நம்மை பின்பற்றுகிறவர்களாக மாறு வார்கள். நாம் தனிமைப்படுத்தப் படும் காலம் நாம் சீர்படும் கால மாக மாறட்டும். அப்போது ஆண்ட வர் மனமிரங்குவார். சூழ்நிலைகள் அனைத்தையும் அனுகூலமாக மாற்றுவார். இதுவே எழுப்புதலின் காலமாக இருக்கும்.

இந்த சாட்சியை பகிர்ந்து கொண்ட சகோதரி, தென் தமிழகத் திலுள்ள தூத்துக்குடி மாவட்டம் நாச ரேத்தைச் சேர்ந்தவர்கள். அமெரிக் காவிலும் சாட்சியாக இருப்பதைக் கண்டு தென் தமிழகம் பெருமித மடைகிறது. ●

**- நன்றி: தகவல் - இணையதளம்**



**உண்மையுள்ள ஊழியக்காரனே,**
**உன் எஜமானில் சந்தோஷத்தில் பிரவேசி**

கடந்த 25 ஆண்டுகள் வோர்டு ஆஃப் கிரைஸ்ட் ஊழியத்தில் இணைந்து ஊழியம் செய்து வந்த அருமையான சகோதரன் எங்கள் ஊழியத்துக் கென்று கர்த்தர் கொடுத்த முன்னணி ஊழியக்காரனாகிய சகோதரன் சத்யாவை நாங்கள் இழந்துள்ளோம். அவர் எங்களோடு பணி செய்ய தொடங்கின நாள் முதல் கடைசி வரைக்கும் உற்சாகம் குன்றாமல் ஊழியம் செய்தார். எப்பொழுதும் அவருடைய முகத்தில் புன்சிரிப்பைக் காணலாம். அதிகமாய் பேசமாட்டார். எங்கள் புத்தக சாலைகளில் எங்கெங்கே சரி செய்ய வேண்டியதுண்டோ அங்கெல்லாம் சகோதரர் சத்யாவை அனுப்பினால் காரியத்தை கச்சிதமாய் முடித்து வந்து விடுவார். எங்களோடு சேர்ந்து கடினமான நுகத்தை சுமந்தார். எங்கே அனுப்பினாலும் எந்த தயக்கமுமின்றி உடனே பிரயாணத்திற்கு ஆயத்தமாய் இருப்பார். அவர் சரீரத்தில் ஏற்பட்ட பெலவீனத்தின் மத்தி யிலும் கூட எங்களுக்கு தோள் கொடுத்தார். நாகலாந்து, கோஹிமாவில் கடுங் குளிர் காலத்திலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அந்த வேலையில் மிகச் சிறப்பாகப் பணி யாற்றினார். அவருடைய பிரிவு, அவர் விட்டு சென்ற குடும்பத்திற்கு மட்டுமின்றி எங்கள் இலக்கிய ஊழியத்தில் ஈடு செய்ய முடியாத இழப்பு. அவரது மனைவி, இரு பிள்ளைகள் மற்றும் குடும்பத்து மக்களை கர்த்தர் ஆறுதல்படுத்துவராக.

**"தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்" (நீதி.22:29).** ●

# அத்திமரத்திற்கு என்னவாயிற்று?

## (What Happened to the Fig Tree ?)

மனுக்குலத்தைப் படைத்த தேவன், தமது முதல் படைப்பாகிய ஆதாம், ஏவாளிடம் முதல் முதலாக "நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி... ஆண்டு கொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதித்தார் என்று (ஆதி.1:28)ல் காண்கிறோம். ஆனால் "பலுகிப்பெருகி" என்ற சொற்றொடருக்கு ஆங்கில மொழி பெயர்ப்பில் "Be fruitful" அதாவது "கனி கொடுங்கள்" என்பதுதான். **ஆண்டவர் மனிதனோடு பேசிய முதல் வார்த்தை "கனி கொடுங்கள்" என்பதே.** இந்த வார்த்தையிலிருந்து மனுக்குலத்தைக் குறித்து அவர் வைத்திருந்த மேன்மையான நோக்கம் என்ன என்பதை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆதி.9:1-ல் தேவன் நோவாவுக்குச் சொல்லும்போது "நீங்கள் பலுகிப் பெருகி" என்றும் வ.9இலும் அதே வார்த்தைக்கு Be fruitful என்ற ஆங்கில வார்த்தையே சொல்லப்பட்டுள்ளது. லேவி 26:9இலும் "உங்களைப் பலுகிப் பெருகப் பண்ணுவேன்" என்று கூறும்போதும் ஆங்கிலத்தில் I will make you fruitful என்றுதான் கூறப்பட்டுள்ளது. கனி கொடுக்கும் வாழ்வைத்தான் ஆண்டவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். அதுவே அவருடைய திருநோக்கம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்னோடியாக வந்தவன் யோவான்ஸ்நானன். அவன் தன்னிடம் வந்தவர்களுக்குக் குறிப்பாக சில பரிசேயர்களுக்கும் சதுசேயர்களுக்கும் ஞானஸ்நானம் கொடுத்த சந்தர்ப்பத்தில் கனி கொடுக்கும் அனுபவத்தை முதன்மைப்படுத்தியும் கனி கொடுக்கத் தவறினால் சந்திக்க வேண்டிய கடும் தண்டனையைக் குறித்து எச்சரித்தும் பேசியிருப்பதாகக் காண்கிறோம் **"மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்"** "இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்" என்றான் (மத்.3:8,10).

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய மலைப்பிரசங்கத்தில் யோவான் ஸ்நானன் சொன்ன அதே கருத்தை வலியுறுத்தி **"நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்.** ஆதலால் அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" என்றார் (மத்.7:19,20).

லூக்.13:6-9 வசனங்களில் கனி கொடுக்க வேண்டிய அவசியத்தை முதன்மைப்படுத்தி ஓர் அருமையான உவமையை இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். இந்த உவமையை விளங்கிக் கொள்வதற்கு முன்பாக இதை எந்தப் பின்னணியத்தில் இதைச் சொன்னார் என்பதை

நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய
திருக்கிறது. ஏனெனில் ‘‘அப்பொழுது
அவர் ஒரு உவமையையும் சொன்
னார்’’ (வ.6) என்பதிலிருந்து இது
இதற்கு முன் சொன்ன காரியத்தின்
தொடர்ச்சியாயிருக்கிறது. அதைக்
கவனித்தால் தேவாலயத்தின் வெளிப்
பிரகாரத்தில் கலிலேயரால் ஏற்பட்ட
ஒரு கலவரத்தை அடக்க தேசாதி
பதியாகிய பிலாத்து எடுத்த கடும்
நடவடிக்கையின் காரணமாக அநேக
கலிலேயர்கள் கொல்லப்பட்டார்கள்.
அவர்களுடைய இரத்தம் பலிபீடத்தி
லிருந்து புறப்பட்ட இரத்தத்தோடு
கலந்தது. சீலோவாமிலே கோபுரம்
விழுந்து பதினெட்டு பேரைக் கொன்று
போட்டது. இந்த இரண்டு சம்பவங்
களையும் இஸ்ரவேல் மக்கள் இயேசு
விடம் அறிவித்து நினைப்பூட்டி
னார்கள். அப்பொழுது இயேசு
அச்சம்பவங்களில் மரித்தவர்
களெல்லாம் மற்றவர்களை விட
பாவிகள் என்று நினைக்கிறீர்களா?
என்ற கேள்வியை எழுப்பி **‘‘நீங்கள்
மனந்திரும்பாமற் போனால்
எல்லாரும் அப்படியே கெட்டுப்
போவீர்கள்’’** என்ற செய்தியை அவர்
களுக்குச் சொன்னார் (லூக்.13:1-5).
இதைத் தொடர்ந்துதான் கனிகொடாத
அத்திமரத்தின் உவமையைச்
சொல்லியிருக்கிறார்.

இந்த உவமை தனிமனிதனுக்கு
மாத்திரமல்ல, முழு இஸ்ரவேல் தேசத்
திற்கும் சொல்லப்பட்டதாகும். திராட்சத்
தோட்டத்தில் நாட்டப்பட்ட அத்திமரம்
இஸ்ரவேல் தேசத்தைக் குறிக்கிறது.
ஏனெனில் தனிமனிதன் செய்கிற
பாவம் தேசத்தையும் பாதிக்கிறது
என்று வேதம் சொல்லுகிறது.
லேவி.18ஆம் அதிகாரத்தின் துவக்
கத்தில் பாவங்களைப் பட்டியலிட்டுக்
காட்டிவிட்டு இறுதிப்பகுதியில் ‘‘இந்த
அருவருப்புகளையெல்லாம் உங்
களுக்கு முன் இருந்த அந்த தேசத்
தின் மனிதர் செய்ததினாலே தேசம்
தீட்டாயிற்று என்று (வ.26)ல் காண்
கிறோம். இந்த உவமையில் கனி
கொடாத அத்திமரத்தைக் குறித்து
தோட்டத்தின் உரிமையாளருக்கும்
தோட்டக்காரனுக்கும் நடந்த உரை
யாடலைக் காண்கிறோம். பொதுவாக
அத்திமரம் கனிகொடுக்க இரண்டு
ஆண்டுகள் ஆகும் என்று சொல்லப்
படுகிறது. மூன்றாவது ஆண்டி
லிருந்து கனிகொடுக்க ஆரம்பிக்கும்.
ஆகவே அந்தத் தோட்ட உரிமை
யாளர் மூன்றாம் ஆண்டிலிருந்து
ஐந்தாம் ஆண்டு வரை மூன்று
ஆண்டுகளாக அத்திமரத்திலே கனி
களைத் தேடினார். ஆனால் ஒன்
றையும் காணவில்லை என்று துக்க
மடைந்தார். மூன்று ஆண்டுகள் 2
அவகாசம் கொடுத்தும் அது கனி
கொடுக்கவில்லை. ஆகவே அதை
வெட்டிப்போடும் உரிமை உரிமை
யாளருக்கு இருக்கிறது. ஆகவே
அவர் தோட்டக்காரனைப் பார்த்து
‘‘இதை வெட்டிப்போடு, இது நிலத்
தையும் ஏன் கெடுக்கிறது’’ என்றார்
(வ.7). கனிகொடாமல் தன்னைக்
கெடுத்துக் கொண்டது மாத்திரமல்ல
தான் நின்று கொண்டிருக்கும் நிலத்
தையும் அந்த நிலத்திலுள்ள திராட்சத்
தோட்டத்தையும் கெடுக்கிறது.

ஆகவே தோட்ட உரிமையாளருக்கு ஒரு பொறுப்பு மிருக்கிறது. “இதை வெட்டிப்போடு” என்ற ஆணை பிறப் பிக்கப்பட்ட பின்னரும் இந்த கனி கொடாத அத்தி மரத்திற்காகப் பரிந்து பேசுகிற, கரிசனையுள்ள ஒரு தோட்டக்காரனைப் பார்க்கிறோம். “ஐயா, இது இந்த வருஷமும் இருக் கட்டும்” என்று கேட்டுக் கொண்டது மாத்திரமல்ல கனி கொடுக்கத்தக்க தாக தான் எடுக்கப் போகிற பிரயாசத் தையும் சொல்லுகிறான். “நான் இதைச் சுற்றிலும் கொத்தி, எருப் போடுவேன். கனி கொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப் போடலாம்” என்றான் (வ.9). இங்கே கவனிக்க வேண்டிய முக்கியமான ஒன்று, “வெட்டிப் போடு” என்ற தீர்ப்பில் மாற்ற மில்லை. தீர்ப்பு ஒரு ஆண்டு தள்ளி போடப்பட்டிருக்கிறது. (Judgement reserved for one year) இது கனி கொடாத அந்த அத்திமரத்திற்கு அதனுடைய தகுதியினிமித்தமாக அல்ல, தோட்டக்காரனின் பரிந்து பேசுதலால் கிடைத்த கிருபை.

தேவ தயவால் கிடைத்த கிருபை யின் ஓராண்டு நீட்டிப்பை (Extension of grace) பயன்படுத்தி அந்த அத்தி மரம் கனிகொடுத்ததா? தோட்டக் காரன் எடுத்துக்கொண்ட பிரயாசத் திற்கு பலன் கிட்டியதா? அந்த அத்தி மரம் தப்பித்ததா அல்லது தீர்ப்பின்படி வெட்டுண்டதா? யோனாவைக் குறித்து வாசிக்கும்போது யோனா வின் முடிவு என்னவாயிற்றோ என்ற கேள்விக்குறியோடு யோனாவின் புத்தகம் முடிவடைகிறது. ஏனெனில் நீ எரிச்சலா இருப்பது நல்லதோ? என்று ஆண்டவர் கேட்டபோது “நான் மரணபரியந்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான்” என்றான் (யோனா 4:9). வேதம், யோனாவின் முடிவை நம்முடைய யூகத்திற்கு விட்டுவிடு கிறது. அதேபோலவே அந்த அத்தி மரத்திற்கு என்னவாயிற்று என்பது நம்முடைய யூகத்திற்கே விடப்பட்டி ருக்கிறது. அத்திமரத்திற்கு என்னவா யிற்று என்ற கேள்விக்கு விடையை ஆராய்வதை விட அந்தக் கேள் வியைச் சற்று மாற்றி நம்முடைய வாழ்வுக்கு நேராகத் திருப்பி **கனி கொடாவிட்டால் எனக்கு என்ன சம்பவிக்கும்?** என்று நம்மை நாமே கேட்போம். ஆண்டவர் நம்மிலே கனிகளைத் தேடுகிறார். தேவால யத்தின் பிரகாரத்தில் நடந்த வன் முறைக் கலவரம், கோபுரம் விழுந்து ஏற்பட்ட விபத்துச் சாவுகள் போன்ற சோக நிகழ்வுகளைக் (Tragedies) கேள்விப்படும்போது நான் கண்டும் காணாதவனைப் போல நடந்து கொள்கிறேனா அல்லது தேவன் மகிமைப்படத்தக்கதாக எச்சரிக்கை யின் சத்தத்திற்கு செவிகொடுத்து கனிகொடுக்கிறவனாக இருக்கிறேனா என்று நம்மை நாமே நிதானித்து அறிய வேண்டிய காலம். இக்காலம் பொன்னானது. கிருபையாய்க் கிடைத்த ஓராண்டு நீட்டிப்பை தவற விடாதிருப்போம். ஏனெனில் தீர்ப்பு ஓராண்டு தள்ளித்தான் வைக்கப்பட்டி ருக்கிறதே தவிர தள்ளுபடி செய்துவிட வில்லை. இதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். ●

# நாமே தேவனுடைய ஆலயம்

ஆராதனைக்கு ஆலயம் திறக்கப் படாதா? இது அநேகருடைய இதயத் தவிப்பு. முன்பு ஆலயம் செல்ல விரும் பாத கிறிஸ்தவர்கள் கூட ஆலயத் திறப்பை எதிர்நோக்கி ஏங்குகின்றனர். வரலாறு காணாத, உலகளாவிய பெரும் பாதிப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கும் ஆட்கொல்லி கொரோனா என்ற கொள்ளை நோயைச் சந்தித்துக் கொண்டிருக் கிறோம். நமக்கு சபை கூடிவருதல் என்பது மிக முக்கியமானது. எனவே தான், எபிரேய நிருப ஆக்கியோன் “சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறதுபோல...”(எபி.10:25) நீங்களும் விட்டுவிடாதிருங்கள் என்று கூறுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் “நீங்கள் தேவனுடைய ஆலய மாயிருக்கிறீர்களென்றும், தேவ னுடைய ஆவி உங்களில் வாசமா யிருக்கிறாரென்றும் அறியாதிருக் கிறீர்களா?” என்று கேட்கிறார் (1 கொரி.3:16,17; 1கொரி.6:19,20). விசு வாசிகள் பலர் சேர்ந்ததுதான் சபை. சபை என்பது ஒரு கட்டடத்தைக் குறிப் பது அல்ல. ஆனால், கூடிவர ஒரு கட்ட டம் தேவை. அதுதான் தேவாலயம்.

இஸ்ரவேல் மக்கள் வனாந்திர மார்க்கமாக கானான் தேசத்திற்குப் பயணித்த பொழுது, தேவனுக்கு ஆராதனை செய்யவும், வழிநடத் தவும் ஆசரிப்புக்கூடாரம் ஒன்றை அமைக்க தேவன் மோசேக்குக் கட்டளையிட்டார். மோசே, தேவன் காட்டிய மாதிரியின்படியும் அளவின் படியும் ஆசரிப்புக்கூடாரத்தை அமைத்தான். ஆசரிப்புக்கூடாரத்தில் அக்கினிஸ்தம்பம் இறங்கிற்று. ஆசரிப்புக் கூடாரத்தைப் பெயர்த்து வேறு பாளையத்திற்குப் பயணிக்கும் போது இரவில் அக்கினி ஸ்தம்பத் தாலும், பகலில் மேக ஸ்தம்பத்தாலும் அவர்களை வழிநடத்தினார். ஆசரிப்புக் கூடாரம் எருசலேமுக்கு கொண்டு வந்தபின் தாவீது விலைக் கிரயமாக வாங்கிய ஓர்னானின் களத்தின் நிலத்தில் பலிபீடத்தைக் கட்டி பலி செலுத்திய அதே இடத்தில் ஆலயம் கட்டப்பட வேண்டும் என்று தீர்மானித்தார் (1 நாளா.21:26-28). “அப்பொழுது தாவீது: தேவனாகிய கர்த்தருடைய ஆலயம் இருக்கும் ஸ்தலம் இதுவே...என்றான்” (1நாளா.22:1). வெளிப்பிரகாரம், உட்பிரகாரம் (அல்லது பரிசுத்தஸ் தலம்) சந்நிதி ஸ்தானம் (அல்லது மகா பரிசுத்த ஸ்தலம்) என்ற ஆசரிப்புக்கூடார அமைப்பின் படியே சாலொமோன் இராஜா தேவால யத்தைக் கட்டினான் (1இராஜா.6ம் அதிகாரம்).

இந்த ஆலயத்தைக் கருத்தில் கொண்டுதான் எபிரெய நிரூபத்தில் எருசலேம் தேவாலய முப்பரிமாண முடையதாகக் காணப்பட்டது போல் (எபி.9:1-5), நம்முடைய சரீரமும் முப்பரிமாணமுடையதாகக் காணப்படுகிறது என்று வேத

வல்லுநர்கள் விளக்குகின்றனர். நாமே தேவனுடைய ஆலயம் என்கிறபோது வெளிப்பிரகாரம் நம்முடைய சரீரத்திற்கும் பரிசுத்த ஸ்தலம் ஆத்துமாவுக்கும் மகா பரிசுத்த ஸ்தலம் ஆவிக்கும் ஒப்பிட்டு வேத வல்லுநர்கள் விவரிக்கின்றனர்.

தேவன் ஆதாமை மண்ணினால் உருவாக்கி, அவன் நாசியிலே தம்முடைய ஜீவ சுவாசத்தை ஊத அவன் ஜீவ ஆத்துமாவானான் (ஆதி.2:7). அதாவது அவன் ஆவி, ஆத்துமா, சரீரம் உடையவன் ஆனான். பவுல் அப்போஸ்தலன் "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனைத் தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்" என்று (1 கொரி.3:16, 17)ல் கூறுவதுபோல், தேவனுடைய ஆலயமாக விளங்கும் நாம் வெளிப்பிரகாரத்தில் வாழ்கிறோமா, பரிசுத்த ஸ்தலத்தில் வாழுகிறோமா, மகா பரிசுத்த ஸ்தலத்தில் வாழும் அனுபவமுள்ளவர்களாக வாழ்கிறோமா என்று சுயபரிசோதனை செய்வோம்.

### ஆலயத்தின் வெளிப்பிரகாரம்

இது ஒரு திறந்தவெளி. இதில் பலிக்கான இளங்காளைகள், ஆடுகள், புறாக்கள் போன்றவற்றை விற்கும் வியாபாரஸ்தலம், பலிபீடம், வெண்கலத் தொட்டி காணப்பட்டது. நியாயப் பிரமாண முறைமையின்படி இஸ்ரவேல் மக்கள் பலி செலுத்த, ஆடு, மாடுகளை அதிக விலை கொடுத்து வாங்குவார்கள். ஏனென்றால் இந்த வியாபாரிகள், பரிசேயர், சதுசேயர், வேதபாரகரின் பினாமிகளாக இருந்ததால் இலஞ்சமும், ஊழலும் தாண்டவமாடியது. எனவேதான் குருத்தோலை ஞாயிறன்று, தேவாலயத்திற்கு வந்த இயேசு, விற்கிறவர்களையும், கொள்கிறவர்களையும் விரட்டி அடித்து என்னுடைய ஜெபவீட்டைக் கள்ளர் குகையாக்கினீர்கள் என்று கடிந்துகொண்டு உபதேசித்தார் (மாற்.11:17).

பலி செலுத்துவதற்கான மிருகங்களை வாங்கியவர்கள், தங்கள் பாவ நிவாரண பலியாக ஆசாரியனிடம் கொடுக்க, ஆசாரியன் பல மிருகத்தைக் கொடுத்தவனுக்காக பலியை செலுத்துவான். பின், ஆசாரியன் வெண்கலத் தொட்டியில் தன்னை சுத்திகரித்துக் கொள்வான். அப்பொழுதுதான் உட்பிரகாரத்திற்குள் பிரவேசிக்கத் தகுதியுடையவன் ஆவான்.

### நம் சரீரம்: வெளிப் பிரகாரம்

உலகம் என்ற திறந்தவெளியில் நாம் வாழ்ந்து வருகிறோம். சரீரத்தின் ஐம்புலன்களின் இச்சைகளுக்கு இடங்கொடுத்து கலா.5:19-21, ரோமர் 1:29-31ல் காணப்படும் அனைத்து பாவங்களும், தீய சிந்தனைகளும் நம் மாம்சத்தை ஆட்கொண்டதால் பாவத்திற்கு அடிமைகளாக நம்

இருதயம் ஒரு கள்ளர் குகையாகவே காணப்பட்டது. நம் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக் கொண்டிருந்தது (சங்.119:25).

ஆனால் யோவான் 3:16-ன்படி ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்''. அந்த அன்பு நம்மை சந்தித்தது. புதிய ஏற்பாட்டின் காலத்தில் உலகத்தின் பாவத்தைப் போக்க, சிலுவை என்னும் பலிபீடத்தில், தம்மைத் தாமே ஒரே பலியாக இயேசு கிறிஸ்து ஒப்புக்கொடுத்தார் என்ற சுவிசேஷம் நமக்கு அறிவிக்கப் பட்டது. அந்த சுவிசேஷத்தைக் கொண்டு ஆவியானவர் நம்மில் கிரியை செய்தபொழுது, நாம் பாவிகள் என்று உணர்ந்து, நம் பாவத்தை அறிக்கையிட்டு, அவர் இரத்தத்தினால் கழுவப்பட்டு மீட்கப் பட்டோம். மீட்கப்பட்ட நாம் அதற்கு அடையாளமாக முழுக்கு ஞானஸ் நானம் பெற்று அவருடைய பிள்ளை களும், சுதந்தரருமானோம். மண் ணோடு ஒட்டிக் கொண்டிருந்த நம் ஆத்துமா பரிசுத்த ஆவியின் ஆளு கைக்கு உட்பட்டதால் தேவன் தங்கும் பரிசுத்த ஸ்தலமாக மாறியது.

### ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலம்

இதில் ஆசாரியன் மாத்திரம் நாள்தோறும் பிரவேசித்து பணி செய்யவேண்டும். அங்கு குத்து விளக்கு, மேஜை மீது வைக்கப் பட்டுள்ள தேவசமுகத்து அப்பங்கள், தூபபீடம் காணப்படும். குத்துவிளக்கு எரிந்துகொண்டே இருக்க அதற்கு எண்ணெய் ஊற்றுவது (லேவி.24:4), புதிதாக அன்றாடம் சுடும் அப்பத்தை வைப்பது, தூபவர்க்கமிடுவது ஆகியவை ஆசாரியருடைய வேலை (லேவி.24:7).

### நம் ஆத்துமா (பரிசுத்தஸ்தலம்)

ஆத்தும இரட்சிப்பைப் பெற்ற நாம் இராஜாக்களும் ஆசாரியர்களுமா யிருக்கிறோம். (வெளி.1:6, 1பேதுரு 2:9). நாம் ரோமர் 12:1-ல் வாசிப்பது போல, அன்றாடம் நேரிடும் சோதனை யினின்று தப்பித்துக்கொள்ள, நம் சரீரத்தின் அவயவங்களைத் தனித் தனியே ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து புத்தியுள்ள ஆராதனை செய்யும் ஆசாரியர்கள் நாம். பாவத்தை ஜெயித்ததால் நாம் இராஜாக்கள். நம் ஆவி அவிந்துபோகாமல் இருக்க பரிசுத்த ஆவி என்னும் எண்ணெ யால், நம் ஆத்துமா எரிந்து பிரகா சிக்கிறதாகவும், பிறரை ஆச்சரியமான ஒளிக்கு வரவழைக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும். அன்றாட வேத வசனமாகிய அப்பத்தைப் புசித்து, நம் ஆத்துமாவை ஆவிக்குள்ளாகப் போஷிக்கிறவர்களாகவும் விளங்க வேண்டும். இல்லையேல் ஆத்துமா செத்த நிலையை அடைந்து விடும். பரிசுத்தஆவியின் அனலுடன், வேதம் வாசிப்பதுடன் ஜெபதூபங்களை நாம் ஏறெடுக்க வேண்டும் (சங்.141:2).

தேவன் அதை சுகந்த வாசனையாக முகர்ந்து நம்மில் களிகூறுகிறார் (வெளி.8:3,4). நாம் பரிசுத்த ஆவிக்குள் வேதம் வாசித்து, ஜெபிக்கும் கிறிஸ்தவர்களாக வாழும்பொழுது, நாம் பிறருக்கு நற்கந்தங்களாக வாழுவோம் (2 கொரி.2:15).

## தேவாலயம், மகா பரிசுத்த ஸ்தலம்

இயேசு சிலுவையில் தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்த பொழுது தேவாலயத்தின் திரைச்சீலை மேலிருந்து கீழாக இரண்டாகக் கிழிந்தது என்று வாசிக்கிறோம். அதற்கு முன்னர் பிரதான ஆசாரியன் மாத்திரம் வருடத்திற்கு ஒருமுறை இரத்தத்துடன் பிரவேசித்து, தனக்காகவும், இஸ்ரவேல் மக்கள் அனைவருக்காகவும் பாவ நிவிர்த்தி செய்தான். அங்கு உடன் படிக்கைப் பெட்டியும், அதற்குள் பத்து கற்பனைகள் எழுதப்பட்ட பலகையும், பொற் கிண்ணத்தில் மன்னாவும், ஆரோனின் துளிர்த்த கோலும், உடன்படிக்கைப் பெட்டிக்கு மேல் கிருபாசனமும், கிருபாசனத்தின் மேல் தங்கள் செட்டைகளை விரித்து, ஒன்றை ஒன்று நோக்கிக் கொண்டிருக்கும் இரு கேருபீன்களும் இருந்தன.

## மகா பரிசுத்த ஸ்தலம் - நம்முடைய ஆவி

ஆவிக்குள்ளான கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நாம், மாம்சத்துக்குரியவர்களல்ல, ஆவிக்குரியவர்கள். (ரோமர் 8:16) நம்முடைய ஆவி பரிசுத்த ஆவியுடன் ஐக்கியமாகியதால் நம் ஆவி மகா பரிசுத்த ஸ்தலம். இதில் கிறிஸ்துவே உடன் படிக்கைப் பெட்டி. ஆம், அவர் இரத்தத்தின் மூலமாக புது உடன் படிக்கையைப் பெற்றுள்ளோம் (1 கொரி.11:25). நம் இதயம் என்னும் சதையாகிய பலகையில் (2 கொரி.3:2). (மத்.5:21-48) ரோமர் 12:9-21 வரை எழுதப்பட்டுள்ள அன்பின் பிரமாணமாகிய "உன்னை நேசிப்பதுபோல பிறனையும் நேசி. இதில் நியாயப் பிரமாணம் முழுமையும் அடங்கியிருக்கிறது" என்ற புதிய பிரமாணம் எழுதப்பட்டுள்ளது. மகா பரிசுத்த ஸ்தலமாகக் கருதப்படும் நம் ஆவி, எப்பொழுதும் பரிசுத்த ஆவியுடன் இணைந்திருக்க (கொலோ.3:3) தேவ வசனமாகிய மன்னாவை அனுதினமும் புசித்து, அதைத் தியானித்து, அதனால் நித்திய ஜீவனைப் பெற்றவர்களாய், ஆரோனின் துளிர்த்த கோல் போல மறுரூபமாக்கப்பட்டவர்களாய் அவரின் சாயலுக்கு ஒப்பாக மாறுகிறோம் (1 யோவான் 3:2).

இவ்வாறு, கிருபாசனத் தண்டையில் நெருங்கி (எபி.4:16) அங்கே அவரைச் சந்திக்கிறோம் (யாத். 25:22). இங்கே என்னண்டையில் ஓர் இடமுண்டு (யாத்.33:21) என்று நம்மை அழைத்து, அரவணைக்கிறார்.

- தொடர்ச்சி 28ம் பக்கம் பார்க்க..

# கிறிஸ்தியானின் மோட்சப்பிரயாணம்

**- பாகம் 11**

மாயாபுரிச் சந்தையில் விற்பனை யாளர்கள் கூவிக்கூவி அழைத்தும் எந்தப் பொருளையும் வாங்காமல் “நாங்கள் சத்தியத்தையே வாங்கு வோம்” என்று கூறிய காரணத்தால் கிறிஸ்தியானும், உண்மையான வனும் சிறையில் அடைக்கப் பட்டனர். அவர்களை விசாரிக்க நாளும் குறிப்பிடப்பட்டது என்று கடந்த (ஜூன் 2020) இதழில் கண்டோம்.

## மாயாபுரிச் சந்தையில் ஒரு நீதிவிசாரணை

விசாரிக்கும் நாளும் வந்தது. “நீதி அரசர், நன்மையை வெறுப் பவன்” (Lord Hate Good) முன்பாக கிறிஸ்தியானும், உண்மையான வனும் நிறுத்தப்பட்டனர். பொறாமை (Envy), மூட நம்பிக்கை (Superstition), நன்றி கெட்டவன் (Pick thank), புகழ் விரும்பி (Flat-terer) ஆகிய சாட்சிகளும் நீதி மன்றத்தில் இருந்தனர். சாட்சிகள் அழைக்கப்பட்டனர். முதலாவதாக பொறாமை சாட்சியளிக்க முன் வந்தான். சத்திய பிரமாணம் செய்து கொண்டான். “உண்மையான வன், மாயாபுரிச் சந்தையின் அதி பதிக்கும் மாயாபுரி மக்களுக்கும் விரோதமாகச் செயல்பட்டான். “நம் தேசத்து சட்டங்களையும், நடை முறைப் பழக்க வழக்கங்களையும் அற்பமாகப் பேசி இகழ்ந்தது மல்லா மல், தான் நம்பிக்கை வைத் திருக்கும் கிறிஸ்தவம் இந்த தேசத்து கோட்பாடுகளும் முற்றிலும் நேர்மாறா னவைகள் என்று பேசுகிறான்” என்று சாட்சியளித்தான்.

மூடநம்பிக்கையின் முறைவந்தது. அவன் அழைக்கப்பட்டான். “உண்மை யானவனை எனக்கு அதிகமாகத் தெரியாது. ஆனால் கிறிஸ்தியானைக் குறித்து எனக்கு நிச்சயமாக தெரியும். இவன் ஒரு கொள்ளை நோய். நம் முடைய மதவழிபாடுகளைக் கொண்டு தேவனைப் பிரியப்படுத்த முடியாது. இனியும் தொடர்ந்து உங்கள் பாவங் களில் வாழ்வீர்கள் என்றால் ஒருநாள் முற்றுமாய் நீங்கள் அழிந்து போவீர்கள் என்று துணிகரமாகப் பேசினான்” என்று சாட்சி அளித்தான்.

அடுத்த சாட்சி நன்றி கெட்டவன் (Pick thank). அவன் சாட்சியமளிக்க முன் வந்தான். சத்திய பிரமாணம் எடுத்துக் கொண்டான். “கனம் நீதிபதி அவர்களே, இந்த மனிதனை எனக்கு நீண்டநாட்களாகத் தெரியும். இவன் எப்படிப் பேசவேண்டு மென் பதில்லாமல் தகாதவிதமாக துணிகர மாக பேசியதை நான் கேட்டேன். நமது மாயாபுரிச் சந்தையின் அதிபதி யாகிய பெயல்செபூலையும் (Beelze bub) அவருடைய நண்பர்களாகிய இச்சை நேசன் (Love Lust) காம பிரியன் (Carnal Delight) மற்றும் பேராசைக்காரன் (Greedy) ஆகியோ ரையும் மிகவும் இகழ்ந்து பேசினான்.

எல்லாவற்றிற்கும் மேலாக கனம் நீதிபதி அவர்களையே இழிவான வார்த்தைகளால் பேசினான்" என்று சாட்சியமளித்தான்.

தன்னைக்குறித்து இழிவான வார்த்தைகளால் பேசினான் என்று கேட்ட மாத்திரத்தில் "நீதிபதி நன்மையை வெறுப்பவன்" கடுங் கோபம் கொண்டு உண்மையான வனை கடுமையான வார்த்தை களால் திட்டினான். எனினும் சாட்சிகள் சொன்ன காரியங்களை யிட்டு பதிலுரை கூற அவனுக்கு வாய்ப்பளித்தார். உண்மையானவன் சற்றும் பதறாமல் தைரியமாகப் பேச ஆரம்பித்தான். முதலாவதாக **பொறாமை கூறிய குற்றச்சாட்டிற்கு** பதிலுரைத்தான். "மாயாபுரிச் சந்தை அதிபதிக்கு விரோதமாகவோ, மக்களுக்கு விரோதமாகவோ நான் எதுவும் பேசவில்லை. ஆனால் வலி யுறுத்திச் சொன்ன ஒரே காரியம்: எவைகளெல்லாம் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமானவை களோ அவைகளெல்லாம் கிறிஸ்தவக் கோட்பாடுகளுக்கு விரோதமானவை என்றுதான் சொன்னேன். **மூடநம் பிக்கையின் குற்றச்சாட்டிற்கு** பதிலுரைக்கையில் தேவனுடைய சித்தத்தைக் குறித்த அறிவோடும், மெய்யான விசுவாசத்தோடும் தேவனை ஆராதிக்க வேண்டும் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்பு டையதல்லாத எந்த தேவ ஆராத னையும் நித்திய வாழ்வுக்கு பயனுள் ளதாக இருக்காது என்றுதான் சொன் னேன் என்றான். **நன்றி கெட்டவன் குற்றச்சாட்டிற்கு** பதிலுரைக்கையில் எந்த இழிசொல்லும் பயன்படுத்தா மல் சுருக்கமாக இந்த மாயாபுரி நகரத்தின் அதிபதி நரகத்தின் அதிபதி தான் என்று கூறி முடித்தான்.

நீதிமன்றத்தில் ஒரு குற்றம் பற்றிய உண்மையைக் கேட்டறிய நியமனம் செய்யப்பட்ட ஒரு குழு வினர் இருப்பார்கள் (Jury). இப்பொழுது நீதிபதி அவர்களுடைய தீர்ப்பைத் தெரிவிக்கும்படி கேட்டார். அக்குழுவில் குருடன் (Blind) பயனற் றவன் (No good) குரோதன் (Malice) இச்சை நேசன் (Love Lust) பெருமை (High minded) தன்னிஷ் டம்போல் வாழ்பவன் (Live Loose), பகைமை (Enmity), வெளிச்ச வெறுப் பாளி (Hate Light) பொய்யன் (Liar) கொடூரன் (Cruelty) பிடிவாதக்காரன் (Imlacable) ஆகிய ஜுரிகள் 12பேர் இருந்தனர். அவர்கள் தீர்ப்பு சொல் வதற்கு முன்பாக சிலகாரியங்களை நீதிபதி நினைப்பூட்டினார். பார் வோனின் காலத்தில் தேசத்தின் சட்ட திட்டங்களுக்கும் பார்வோனுக்கும் மிஞ்சி வளர்ந்த ஒரு கூட்ட மக்களை கொல்லுவதற்கு ஆணை பிறப்பிக்கப் பட்டது. நேபுகாத்நேச்சார் செய்த பொற்சிலையை பணிந்து கொள்ள மறுப்பவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டது. தரியு இராஜா தன்னை தெய்வத்திற்கு ஒப்பாக வணங்க வேண்டும் என்ற ஆணையை மறுப்பவர்கள் சிங்கக்

கெபியில் போடப்படவேண்டும் என்று ஆணை பிறப்பித்தான். ஜூரிகள் இவற்றை மனதில் கொள்ள வேண்டும் என்று ஆலோசனை சொல்லி வெளியே அனுப்பி முடிவோடு வரும்படி அனுப்பினான். ஜூரிகள் வெளியே சென்றுவிட்டு சிறிது நேரத்தில் உள்ளே திரும்பினார்கள். "உண்மையானவன் குற்றவாளி. மரணதண்டனை அளிக்கப்பட வேண்டியவன்" என்று ஜூரிகள் தீர்ப்பளித்தனர்.

நீதிபதி உண்மையானவன் இரும்புக்கம்பத்தில் கட்டி வைத்து உயிரோடு எரித்துக் கொல்லப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார். எரிப்பதற்கு முன்பாக அவன் நகர வீதிகளில் இழுத்துச் செல்லப்பட வேண்டும். இழுத்துச் செல்லும் போது அவனை இரக்கமின்றி அடித்து சித்திரவதை செய்ய வேண்டும் என்று தீர்ப்பளித்து தண்டனையை நிறைவேற்ற அனுப்பினார். உண்மையானவன் எரித்துக் கொல்லப்பட்ட அந்தக் கொடூரக் காட்சியைக் கிறிஸ்தியான் கண்டான். வானத்திலிருந்து ஒரு அக்கினி ரதம் இறங்கி வரக் கண்டான். அதே சமயத்தில் பரலோகத்திலிருந்து மகிமை இறங்கி உண்மையானவன் பரலோக நகருக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்.

உண்மையானவனுக்கு அளித்த தண்டனை நிறைவேற்றுவதை குதூகலத்தோடும், பரவசத்தோடும் பார்த்துக் கொண்டிருந்த மக்கள் கிறிஸ்தியான் மீது கவனம் செலுத்துவதை மறந்துவிட்டனர். ஆனால் ஆண்டவர் கிறிஸ்தியானுக்கு அவர்கள் கொடுத்த தண்டனையை மாற்றியமைத்துவிட்டார். கிறிஸ்தியான் அங்கிருந்த சூழ்நிலையைப் பயன்படுத்தி அங்கிருந்து தப்பிச் செல்ல ஆண்டவர் வழியை உண்டாக்கிக் கொடுத்தார். கிறிஸ்தியான் மாயாபுரியிலிருந்து தப்பி மோட்சப் பயணத்தைத் தொடர்ந்தான்.

## நாம் கற்றுக்கொள்வது

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன்" என்ற இயேசுவின் வார்த்தைகள் மேலே குறிப்பிட்ட சம்பவங்கள் நமக்கு நினைப்பூட்டுகிறது. கிறிஸ்தியான், உண்மையானவன் இவர்களின் மாயாபுரிச்சந்தையின் அனுவத்தைக் காணும்போது அவர்கள் யாரோடும் பேசவில்லை. எந்தப்பொருளையும் அங்கு வாங்கவில்லை. அங்குள்ள விற்பனையாளர்கள் தான் அவர்களை வற்புறுத்தினார்கள். உண்மையானவன் ஒரே ஒரு முறை மாத்திரம் "நாங்கள் சத்தியத்தைத் தான் வாங்குவோம்" என்று சொன்னான். ஆனால் மாயாபுரியைக்குறித்தும் அதன் அதிபதியைக் குறித்தும் அங்குள்ள மக்களைக் குறித்தும் இகழ்ந்து பேசினார்கள் என ஜோடனையான சாட்சிகள் கூறப்பட்டதைப் பார்க்கிறோம்.

நீதிமன்ற விசாரணை, சாட்சிகள், ஜுரிகளின் தீர்ப்பு, நீதிபதியின் தீர்ப்பு இவைகளெல்லாம் பார்க்கும் போது நீதிமன்றங்கள் சரியாக இருப்பது போல் தோன்றுகிறது. ஆனால் பொய்ச்சாட்சியின் கூற்றுகளால் தீர்ப்பு திசைமாறிச் சென்று விடுகிறது. விளைவாக நீதி செயலிழந்து விடுகிறது. இறுதியாக மாயையையும் தீமையையும் வழிபடும் இடத்திற்கு இழுத்துச் சென்று விடுகிறது. இவைகளெல்லாம் நீதியுள்ள தேவனுக்கு விரோதமானவைகள்.

நீதி புரட்டப்படுவதை இன்று நாம் காணமுடிகிறது. ஏசாயா தீர்க்கதரிசி சொல்லுகிறது போல மக்கள் தீமையை நன்மை என்றும் நன்மையை தீமை என்றும் சொல்லும் இடத்திற்கு வந்து விட்டனர் (ஏசா.5:20). தேவனுடைய பார்வைக்கு அருவருப்பானவைகள் என்று கருதப்படுபவைகள் பாவம். ஆனால் மக்கள் அவற்றை பாவம் என்று ஏற்றுக் கொள்ளுகிறதில்லை. அதைப் பாவம் என்று சுட்டிக்காட்டுகிறவர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகிறார்கள். ஆனால் இந்த கடைசி நாட்களில் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற (பூரணப் படுத்துகிறவர் - Perfector) இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம்'' என்று எபி.12:1-ல் சொல்லப்பட்டது போல நாம் ஓடி நமது இலக்காகிய மோட்சப் பட்டணத்தைச் சென்றடைவோம். - தொடரும் ●

– சகோதரி. லாரா டெலனோ, lauradelano@yahoo.com

24ம் பக்கத் தொடர்ச்சி...

ஒரு மணவாளனும், ஒரு மணவாட்டியும் ஒரு மனதாய் ஒன்றாயிருக்கும் அனுபவம் உன்னத அனுபவம். அங்கே கேருபீன்களின் செட்டைகள் நம்மை மூடி மறைத்து, காத்துக் கொள்ளும். நாம், நம் பங்கைப் பெற்றுக் கொள்ளும்வரை அவருடைய அன்பிலே மூழ்கித் திளைத்தவர்களாய், பரம எருசலேமாகிய நித்திய மகா பரிசுத்த ஸ்தலத்தை அடையும் பாக்கியத்தைப் பெறுவோமாக.

இப்படி, பரிசுத்தமடைந்த மணவாட்டியாகிய சபையை அழைத்துக் கொள்ள, மணவாளனாகிய இயேசு சீக்கிரம் வருகிறார். பரனோடு நித்தியமாய் வாழ அவரோடு பறந்திடுவோம். நாம் பறந்திடுவோம். அதற்கு ஆயத்தமாக இருக்கிற அனுபவத்தை நாம் பெற்றிருக்கிறோமா? நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் தேவ ஆலயமாக நாம் வாழ்வோம். **“ சமாதானத்தின் தேவன் தாமே உங்களை (நம்மை) முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் (நம்) ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை (நம்மை) அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்''** (1 தெச.5:23,24). ●

# வஞ்சிக்கப்படாதிருங்கள்

**“பின்பு, அவர் ஒலிவமலையின் மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்”** (மத்.24:3).

இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் எருசலேம் தேவாலயத்தின் பிரமாண்டமான கட்டட அமைப்பை அவருக்குச் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் மிகுந்த பெருமிதத்தோடு காட்டியிருக்க வேண்டும். ஆனால் இயேசு: “இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும்” என்று முன்னுரைத்தார். சீஷர்களுக்கு மிகுந்த மன உறுத்தலை உண்டாக்கியிருக்க வேண்டும். ஆகவே அவர் ஒலிவமலையில் உட்கார்ந்திருக்கும்போது தனித்து வந்து “இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?”, “உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? என்று கேட்டனர். அவர் முதல் கேள்விக்குப் பதிலளிக்கவில்லை. இரண்டாவது கேள்விக்கு விரிவான பதிலளித்தார். அவரது விரிவான பதிலின் முதற்பகுதியை இக்கட்டுரை மூலம் தியானிக்கப் போகிறோம்.

முதலாவது இயேசுகிறிஸ்து தமது சீஷர்களிடம், **“ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்”** என்று கூறினார் (மத்.24:4). இயேசுகிறிஸ்து, சீஷர்கள் ஆவலோடு கேட்ட கேள்விகளுக்கு நேரிடையாக பதிலளிக்காமல் ஏன் எடுத்த எடுப்பில் ஓர் எச்சரிக்கையைக் கொடுக்கிறார்? ஏனெனில் உலகத்திலும், சபையிலும் பல சம்பவங்கள் நடைபெறும் போது சீஷர்களும் இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களும் அஞ்சிவிடக் கூடாது, அவர்கள் தைரியமாக இயேசுகிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் என்பதற்காக எச்சரிக்கிறார். சம்பவிக்கும் காரியங்களைப் பற்றிய தெளிவு இல்லாவிட்டால் தைரியத்தை இழந்து இடறிப் போக, வஞ்சிக்கப்பட, அன்பு தணிந்து போக, சமாதானத்தை இழந்து கலக்கமடைய நேரிடும்.

சபைகளில் உபத்திரவப்படுத்துகிறவர்களைவிட வஞ்சிக்கிறவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். இந்தச் சூழ்நிலையிலும் நாம் நம் கடமைகளை நிறைவேற்றவும், இயேசுகிறிஸ்துவை உறுதியாய்ப் பின்பற்றவும் வேண்டும். அநேகக் கள்ளக் கிறிஸ்துக்கள் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள். எருசலேமில்தான் அநேக உண்மையான தீர்க்கதரிசிகள் கொல்லப்பட்டனர். இயேசுகிறிஸ்துவையும் எருசலேமின் ஜனங்கள் சிலுவையில் அறைந்து கொன்றனர். அதுபோலவே இக்காலத்திலும் சபைகளில் கள்ளக்கிறிஸ்துக்கள் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள். இவர்கள் தங்களையே கிறிஸ்து என்று வெளிப்படுத்தி வஞ்சிப்பார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரகசிய வருகையில்

எடுத்துக் கொள்ளப்பட விரும்பும் கர்த்தருடைய பிள்ளைகள் இப்படிப்பட்ட சோதனைகளையெல்லாம் ஜெயித்து வஞ்சிக்கப்படாதபடி எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்.

இதற்குப் பகுத்தறிவு தேவை. மரமானது அதன் கனியினால் இன்ன மரம் என்று அறியப்படும் என்று இயேசு கூறினார். அவர்களது ஜீவியம், சுபாவங்கள் இவைகளை வைத்து நாம் அவர்களை எளிதாகப் பகுத்தறியலாம். சாத்தான் தேவனுடைய பிள்ளைகளை வஞ்சிப்பதற்காக வஞ்சகமான கிரியைகளைச் செய்கின்றான். **ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்திருக்கிறான்**. அதாவது தன்னை நல்லவன் போல் காண்பிக்கிறான். நல்லவன் என்கின்ற போர்வையில் தீயவன் மறைந்திருக்கின்றான். ஒளி நன்மைக்கு அடையாள மாகவும், இருள் தீமைக்கு அடையாளமாகவும் உள்ளது. தீமை நன்மையைப் போல் தோற்றமளிக்கிறது. வஞ்சிக்கப்பட்டு விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.

தாங்கள் தேவனுடைய ஆவியினால் பேசுவதாக அநேகக் கள்ளத்தீர்க்க தரிசிகள் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள். பிறர் சந்தேகப்படாதவாறு இயேசுகிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டு அநேகரை வஞ்சிப்பார்கள். ஆயிரம், பதினாயிரம் எதிரிகளைவிட நம்மோடு கூட இருந்து நம்மை வஞ்சிக் கிற ஒருவன் மிகவும் பயங்கரமானவன். நம் மத்தியில் வஞ்சிப்பவர்கள் இருக்கும் போது அது நமக்குப் பெரிய தீங்காகவே இருக்கும்.

பொதுவாக தங்களுக்குப் பிரச்சனைகளின் நெருக்கம் ஏற்படும்போது ஜனங்கள் மெய்யாகவே கிறிஸ்துவைத் தேடுவார்கள். அப்போது கிறிஸ்து இங்கே இருக்கிறார் என்றும், அங்கே இருக்கிறார் என்றும் பலர் பலவிதமாகச் சொல்வார்கள். ஆனால் உண்மையான கிறிஸ்து தன்னைப் பற்றி சுய விளம்பரம் செய்யமாட்டார். இதோ இங்கே என்றும், அதோ அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது (லூக்.17:21). கிறிஸ்து சர்வ வியாபி - “எங்கும் நிறைந்தவர்” தம்முடைய நாமத்தை உண்மையாய் தொழுது கொள்ளுகின்ற ஜனங்கள் மத்தியில் இயேசுகிறிஸ்து இருக்கிறார்.

கள்ளக்கிறிஸ்துகளும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் பெரிய அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்வார்கள். ஆனால் அவைகள் மெய்யானவைகள் அல்ல. இயேசுகிறிஸ்து தம்முடைய வார்த்தைகளை அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிப்படுத்தினார். மெய்யான அற்புத அடையாளங் களுக்கு இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளே தெய்வீக முத்திரையாக உள்ளது. கள்ளக்கிறிஸ்துகளும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் தெரிந்து கொள்ளப்பட்டவர் களை வஞ்சிப்பதற்காகவே அற்புத அடையாளங்களைச் செய்கின்றனர். மேலும் தங்கள் சுய பெருமைக்காகவும் தங்களை விளம்பரப்படுத்தவுமே அற்புதங்களைச் செய்கின்றனர். எல்லாமே மாய்மாலமாகவும், வெளிவேஷ மாகவும் உள்ளது.

“நான் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவன், என்னை யாரும் வஞ்சிக்க முடியாது” என மெத்தனமாயிருக்கிறோம். ஆனால் நமது சுயபெலத்தினால் நாம் நிலை நிற்க முடியாது. கர்த்தருடைய கிருபை மாத்திரமே நம்மைப் பாதுகாக்கும், நிலைநிறுத்தும்.

இயேசுகிறிஸ்துவின் எச்சரிப்பின் சத்தத்திற்கு நாம் கீழ்ப்படிந்து நாம் கவன மாக ஜீவிக்க வேண்டும். நமது விசுவாசத்தைக் காத்துக் கொள்ள வேண்டும். அவருடைய வார்த்தையில் நம்முடைய விசுவாசம் நிலைத்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார். எங்கே அவருடைய நாமத்தினால் கூடியிருக்கிறார்களோ அங்கே இயேசு கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிரசன்னம் உள்ளது. நம் மத்தியில் இருக்கும் இயேசு கிறிஸ்துவை உணராமல், அவரை வேறு எங்கும் தேடி அலைய வேண்டியதில்லை. பலர் புதுமையை நாடி அங்கும், இங்கும் அலைகின்றனர். இப்படிப்பட்டவர்கள் முடிவில் நம்பிக்கையை இழந்து, தேவனைத் தூஷிக்கிறவர்களாக மாறு கின்றனர். எனவே, மெய்யான கிறிஸ்துவையும், அவர் வார்த்தைகளையும் நாம் கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

மேலும் (மத்.24:6)-ல் யுத்தங்களையும், யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே; ஆனாலும், முடிவு உடனே வராது, என்று இயேசு கிறிஸ்து தேசங்கள் இடையே நடைபெறகிற யுத்தங்களைப் பற்றி முன்னறி வித்திருக்கிறார். யுத்தங்களின் செய்தி அச்சுறுத்தலை உண்டாக்குவதாயிருக்கும். அச்சுறுத்தல் கலக்கத்தை உண்டாக்கும். ஆனால் தேவனுடைய பிள்ளை களாகிய நமக்கு “உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக” என்று (யோவா.14:27)ல் நம்மை தைரியப்படுத்துகிறார். மேலும் தேவனிடத்திலும், இயேசுவினிடத்திலும் நம்முடைய விசுவாசத்தை ஊன்றும் போது பரலோகத்தில் இயேசு எங்கு இருக்கிறாரோ அதே இடத்திற்கு நம் மையும் கொண்டு போய் சேர்க்க அவர் வாக்களித்திருக்கிறார் (யோவா.14:1-3). இந்த வாக்குறுதியை விசுவாசத்தோடு நம்முடைய தரிசனத்தில் நிறுத்திக் கொள்ளும்போது நம்மைத் தம்மோடு சேர்த்துக் கொள்வார். அந்த விசுவாசமிருப்பின் யுத்தசத்தம் நம்மை கலங்கடிக்க முடியாது.

கிதியோன் சோர்ந்திருந்த வேளையில் கர்த்தருடைய தூதனானவர் “பராக்கிரமசாலியே, கர்த்தர் உன்னோடே இருக்கிறார்” என்றார் (நியா.6:12). தூதனுடைய வார்த்தையால் அவனால் ஊக்குவிக்கப்பட இயலவில்லை. சோர்வே தொடர்ந்தது. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்தார். “உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ...உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்” (வ.14). கிதியோன் தேவனுடைய வார்த்தையில் சார்ந்து கொண்டான்.

- தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க..

RNI NO. TNTAM/2001/06473

# வேர்டு ஆஃப் கிரைஸ்ட்

## கிறிஸ்தவ இலக்கிய புத்தக சாலை

## கிளைகள்

**பெரியகுளம் :**
ஜே.டி.என். பில்டிங்ஸ், வைகை அணை ரோடு,
பெரியகுளம் – 625 601. போன் : 04546 232689

**மதுரை :**
ராஜம் பிளாசா, தல்லாகுளம்,
மதுரை – 625 002. போன்: 0452 2535373.

**திருச்சி :**
எண்.1F, ஒய்.எம்.சி.ஏ. வளாகம்,
ஈ.வே.ரா.ரோடு, புத்தூர், திருச்சி – 620 017.
போன் : 0431 2792266.

**கெல்லிஸ் :**
எண்.100/3, நிர்மலா அப்பார்ட்மெண்ட்,
மேடவாக்கம் டேங்க் ரோடு, கெல்லிஸ்,
சென்னை–10. போன் 044 26613242 / 42640111.

**அடையார் :**
ஹபீப் காம்ளக்ஸ், எண்.5 துர்க்காபாய் தேஸ்முக்
ரோடு, சத்தியா ஸ்டுடியோ அருகில்,
சென்னை–28. போன் 044 24616161.

**தாம்பரம் :**
பழைய எண்.57 புதிய எண்.12,
வெங்கடேசன் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–45. போன் 044 – 22260743.

**போரூர் :**
எண்.22/1–A, ஆற்காடு ரோடு,
BSNL டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் அருகில்,
போரூர், சென்னை–600 116. போன் : 044 – 24762520.

**புதுச்சேரி :**
எண்.66, செங்குந்தர் வீதி,
உருலான்பேட், நெல்லித்தோப்பு,
புதுச்சேரி – 605 005. போன் 0413 2204122.

**திமாப்பூர் :**
எண்.20, நியாமோ லோக்தா ரோடு,
திமாப்பூர் – 797 112. நாகலாந்து.
போன் : 03862 230207.

**இட்டா நகர் :**
ஆர்.கே. மிஷன் ரோடு, இட்டா நகர்,
அருணாச்சல் பிரதேஷ் – 791 113.
போன் : 0360 2217563.

**ஷில்லாங் :**
கேஜேபி அசெம்பிளி கான்பிரன்ஸ் சென்டர்
ஸ்டேட் சென்ட்ரல் நூல் நிலையம் எதிரில்,
ஷில்லாங். போன்: 0364–2500044 / 9445366066

**தூரா :**
ரிங்கேரி, மேற்கு காரோ ஹில்ஸ், தூரா,
மெகாலயா – 794 001.
மொபைல் : 03651 224729.

**போரிவலி (மே) :**
பில்பெரி, கடை எண்.1. ஐ.சி.காலனி,
கார்ப்பரேஷன் பேங்க் அருகில், போரிவலி மேற்கு,
மும்பை – 400103. போன் :022 28925763 / 09967645333

**ஹுப்ளி :**
எண்.L/1, கவிதா அனெக்ஸ், கான்வென்ட் பள்ளி,
எதிரில், ஃபுட் பாஸ்கட் அருகில்,
கேஷ்வாஷபூர், ஹுப்ளி – 23,
போன் : 0836 6290555.

**கர்நாடகா:**
எண்.71, நேரு மெயின் ரோடு,
அரவிந் நகர்,
கமன ஹல்லி, (Below) முத்தூட் பைனான்ஸ்,
பெங்களூர் – 560 084. போன் : 08025 461144.

**நாகலாந்து :**
c.k.ஆர்காடு, தலைமை அஞ்சல் அலுவலகம்,
எதிரில், கொஹிமா – 797 001, நாகலாந்து.
போன் : 0370 2292222.

e-mail to : wocmdu@gmail.com

**Owned, Edited and Published by K. Selwyn Thangadurai,**
D.No.23B, "Thy Grace", Sebastian Church Road, New Ellis Nagar Extn., Madurai - 16.
Ph:0452:4345580. E-mail : wocmdu@gmail.com.
**website: www.wordofchrist.org**

Printed by Mr. Simon Peter at Vasanth Prints & Packs, No.45, Soorappa Mudali Street, Triplicane, Chennai - 600 005. Tamilnadu, India. Ph.044 28485805